யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 பங்குனி 06 திங்கட்கிழமை (19-03-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:113

# சமாதானப் பேச்சு மோதல்களுக்கு மத்தியிலா? யுத்தத்தை நிறுத்திவிட்டா?

## இன்னமும் இணக்கமில்லை என்கின்றார் சொல்ஹெய்ம்



லண்டன்,மார்ச்19

**இலங்கையில் போரில் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் படிப்படியாக நெருங்கி வருவதை உணரக்கூடியதாக இருக்கின்றது. ஆயினும் இரு தரப்புக்கும் இடையே இன்னமும் கணிசமான இடைவெளி இருக்கவே செய்கிறது.**

**இரு தரப்பினருமே போர்நிறுத்தம் ஒன்றைக் கடைப்பிடித்துக்கொண்டு சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதா? அல்லது மோதல்கள் தொடருகின்ற சூழ்நிலையிலேயே பேச்சை ஆரம்பிப்பதா? என்பன போன்ற முக்கிய விடயங்களில் இன்னமும் முரண்பாடு காணப்படுகின்றது.**

**நோர்வேயின் விசேட தூதர் எரிக் சொல்ஹெய்ம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.**

கொழும்புத் தமிழ்ப் பத்திரிகை ஒன்றுக்குத் தூதர் சொல்ஹெய்ம் அளித்துள்ள பேட்டியிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்தப் பேட்டியில் அவர் தெரிவித்துள்ள முக்கிய விடயங்கள் வருமாறு:-

☆பிரிட்டனில் அமுலுக்கு வந்துள்ள

(12ஆம் பக்கம் பார்க்க)

## அரசு யுத்தத்தை நிறுத்தவேண்டும்; பாலசிங்கம் மீண்டும் வலியுறுத்து!

லண்டன்,மார்ச்19

சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கக் கூடிய சூழலை உருவாக்க அரசாங்கமும் யுத்தநிறுத்தம் மேற்கொள்ள வேண்டும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் நோர்வேயின் விசேட தூதர் எரிக் சொல்ஹெய்மிடம் மீண்டும் வலியுறுத்தியிருப்பதாக சர்வதேச செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

லண்டனில் நேற்று அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்த சொல்ஹெய்ம் அவருடன் சில மணிநேரம் கலந்துரையாடினார்.

தமது அமைப்பு ஒருதலைப்பட்சமாக அறிவித்துள்ள யுத்தநிறுத்தத்துக்குப் பதிலாக இலங்கை அரசும் யுத்த நிறுத்தத்தை அறிவித்தால் பேச்சுக்கள் சுமுகமாக இடம்பெற வாய்ப்புக்கள் கிட்டும் என்று அச்சமயம் அன்ரன் பாலசிங்கம் தூதரிடம் வலியுறுத்தினார்.

பேச்சுக்கான திகதி மற்றும் கால அட்டவணையைத் தயாரிப்பது தொடர்பான பணியை இலங்கை அரசாங்கமே செய்யவேண்டும் என்றும் அன்ரன் பாலசிங்கம் நோர்வேத் தூதரிடம் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

நேற்றைய சந்திப்பின்போது இந்தியாவில் தாம் நடத்திய பேச்சுக்கள் தொடர்பான விவரங்களை சொல்ஹெய்ம

(12ஆம் பக்கம் பார்க்க)

## சொல்ஹெய்ம் மீண்டும் பிரபாவைச் சந்திப்பார்?

கொழும்பு,மார்ச்19

நோர்வேயின் விசேட தூதர் எரிக் சொலஹெய்ம், கொழும்புக்கான நோர்வே தூதர் ஜோன் வேஸ்றபேர்க் ஆகியோர் மீண்டும் வன்னி சென்று விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனைச் சந்திப்பதற்காக அடுத்த சில நாள்களில் கொழும்பு வரவுள்ளதாக ராஜதந்திர வட்டாரங்களை மேற்கோள்காட்டி அரசு சார்பு 'சண்டே ஒப்சேவர்' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

இந்தியாவின் அரசியல் நிலைப்பாடு பேச்சுக்கு தடையாக இருக்கவில்லை. நிரந்தர தீர்வை ஏற்படுத்துவதற்கான பேச்சுக்கள் விரைவாகவும், சகல இனங்களின் அபிலாஷைகளையும் நிறைவேற்றுவதாகவும் இருக்க வேண்டும் என்று நோர்வே பிரதிநிதிகளிடம் இந்தியா கேட்டிருக்கிறது -

பேச்சுக்கள் முன்னேற்றம் காணும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீலங்கா ராணுவத்துக்கு மேலும் 8 'மல்ரி பரல்கள்'!

கொழும்பு,மார்ச்19

செக் குடியரசிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட பெருந்தொகை ஆயுத தளபாடங்கள் கொழும்புக்கு எடுத்து வரப்படுவதாக இராணுவ வட்டாரங்களை மேற்கோள்காட்டி 'சண்டே ஐலண்ட்' பத்திரிகை தகவல் வெளியிட்டிருக்கிறது.

பல்குழல் எறிகணை செலுத்திகள் எட்டு, ரீ 55 ரக பீரங்கிகள் இரண்டு டசின், பாலங்களை அமைக்க உதவும் டாங்கிகள் இரண்டு, நடமாடும் பொறியியல் வாகனங்கள் இரண்டு என்பனவே தற்சமயம் கொழும்புத் துறைமுகம் நோக்கி கப்பலில் ஏற்றி வரப்படுவதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. சண்டையில் ஈடுபட்டிருக்கும் இரு தரப்பாரையும் சமாதான மேசைக்கு கொண்டு வர நோர்வே எடுத்துவரும் முயற்சிகள் ஒருபுறம் நடந்தாலும், அரசு திட்டமிட்டபடி முப்படையினரையும், துணை ஆயுதப் படைகளையும் பலப்படுத்தும் பணியில் தொடர்ந்து ஈடுபடும் என்றும் படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இராணுவத்துக்கு ஆள் சேர்க்கும் நடவடிக்கையும் தீவிரமாக முன்னெடுக்கப்பட உள்ளது. அதேவேளை

(12ஆம் பக்கம் பார்க்க)

## 'பொங்கு தமிழ்' குறித்த கலந்துரையாடல்கள்

யாழ்ப்பாணம்,மார்ச்19

'தமிழ்மக்களின் அபிலாஷை சுயநிர்ணய உரிமையே' என்பதை வலியுறுத்தி யாழ்.பல்கலைக்கழகத்தில் நாளைமறுதினம் இடம்பெறவுள்ள 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வுகள் தொடர்பாக நேற்று மாணவர்கள் மத்தியில் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

பல்கலைக்கழகச் சமூகத்தின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள 'பொங்கு தமிழ்' நிகழ்வின் நோக்கம், அதன் செயற்பாடுகள் தொடர்பாக இந்தக் கலந்துரையாடலில் விளக்கம் அளிக்கபபட்டது.

'பொங்கு தமிழ்' நிகழ்வு தொடர்பான மற்றொரு முக்கிய கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளதாக மாணவர் அமைப்புப் பிரதிநிதி ஒருவர் தெரிவிததார். (ஜ-3)

## இடம்பெயர்ந்த தென்மராட்சி மக்கள் ஏப்ரல் இறுதியில் மீளக்குடியமர அனுமதி

### கருத்தரங்கில் படை அதிகாரி தெரிவிப்பு

தென்மராட்சி,மார்ச்19

சாவகச்சேரி, நுணாவில், மட்டுவில், சரசாலை ஆகிய பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் அடுத்த 6 வார காலத்தில் - ஏப்ரல் மாத இறுதியில் - தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர அனுமதிக்கப் படுவர். அதுவரை இப்பகுதிகளில் உள்ள இருப்பிடங்களிலிருந்து உடைமைகளை மீட்டுவர மக்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

நேற்று வரணி மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இடம்பெயர்ந்தோருக்கான கருத்தரங்கில் 52 ஆவது படையணியின் அதிகாரி ஒருவர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் இயங்கிய அரச, கூட்டுறவு, திணைக்களங்கள், வங்கிகளின் தலைவர்கள், பிரதேச கிராம அலுவலர்கள், வணிகர் மன்றத்தின் பிரதிநிதிகள் ஆகியோர் கருத்தரங்கில் பங்குபற்றினர்.

படை அதிகாரி அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இப்பிரதேசங்களில் அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே கடும் மோதல் இடம்பெற்றதால் எண்ணிலடங்கா மிதிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளன. அவற்றினை

(12ஆம் பக்கம் பார்க்க)

## பிரிட்டிஷ் பிரதமர் பிளயரை ஜனாதிபதி சந்திரிகா சந்திப்பார்

கொழும்பு,மார்ச்19

ஐரோப்பாவில் விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பிரிட்டனுக்குச் சென்று பிரதமர் ரொனி பிளயரைச் சந்திப்பார் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த தடவை ஜனாதிபதி லண்டன் சென்றிருந்தபோது அங்கு பிரதமர் ரொனி பிளயரைச் சந்திக்க முடியாது போனது.

இதற்கான காரணத்தை இலங்கை அரசோ லண்டன் நிர்வாகமோ உத்தியோகபூர்வமாகத் தெரிவிக்கவில்லை.

இந்தமுறை ஜனாதிபதி ரொனி பிளயரைச் சந்திப்பார் என்றும், அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே சமாதானப் பேச்சை ஆரம்பிப்பதற்கு நோர்வே மேற்கொண்டுவரும் முயற்சிகள் பற்றி ரொனி பிளயருக்கு அவர் விளக்குவார் என்றும் தெரியவருவதாக 'சண்டே ரைம்ஸ்' தகவல் வெளியிட்டிருக்கிறது.

இதேவேளை -

வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு பேச்சு மூலம் தீர்வுகாணும் விடயத்தில் நோர்வே வழங்கிவரும் பங்களிப்பை பிரிட்டன் ஆதரிப்பதாக பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சின் அலுவலக அதிகாரி பிறயன் வில்சன் 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளார்.

(ஜ-20)

## சர்வதேச தலைமையகத்தை புலிகள் வன்னிக்கு மாற்றினர்?

கொழும்பு,மார்ச்19

விடுதலைப் புலிகள் தங்கள் சர்வதேச தலைமையகத்தை வன்னிப் பகுதிககு மாற்றிவிட்டதாக கொழும்பு ஆங்கில வார ஏடு ஒன்று தகவல் வெளியிட்டிருக்கிறது.

இதுவரை காலமும் லண்டனில் கதறீன்ஸ் வீதி, இலக்கம் 211ஆவது கட்டடத்தில் இயங்கிவந்த இந்தச் சர்வதேசத் தலைமையகம் புலிகளின் தலைமைப்பீடம் அமைந்துள்ள வன்னிக்காட்டுக்கு மாற்றப்பட்டிருக்கிறது.

பிரிட்டனில் பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் விடுதலைப் புலிகள் அமைப்பு சேர்க்கப்பட்டதை அடுத்து அங்கு செயற்பட்ட சர்வதேச தலைமையகத்தை 'சீல்' வைப்பது போன்ற நடவடிக்கைகள் இடம்பெறலாம் என எதிர்பார்க்கும் புலிகள் அத்தகைய தேவையற்ற நடவடிக்கைகளுக்கு வாய்ப்பளிக்காமல் இருப்பதற்கும், தேவையற்ற சச்சரவுகளைத் தவிர்ப்பதற்கும் முன்கூட்டியே தங்கள் தலைமையகத்தை இடம்மாற்றிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## பட்ஜெட் வாக்கெடுப்பு இன்று

கொழும்பு,மார்ச்19

நாடாளுமன்றத்தில் தற்சமயம் விவாதிக்கப்பட்டு வரும் வரவு - செலவுத்திட்டம் மீதான வாக்கெடுப்பு இன்று மாலை 6 மணிக்கு இடம் பெறவுள்ளது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகள் இந்த வரவு - செலவுத்திட்டத்துக்கு ஆதரவாக வாக்களிக்கும் அதே வேளை - ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் ஆகியன எதிர்த்து வாக்களிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(ஜ-3-20)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# ஒரேநாளில் 10 பேரைக் கடித்த விசர் நாய்

கோப்பாய்,மார்ச்19

புத்தூர் குமாரசாமி வீதியில் கடந்த வெள்ளிக்கிழமை ஒரே நாளில் பத்துப் பேர் விசர் நாயினால் கடியுண்டனர்.

பொதுமக்களைக் கடித்து பெரும் பீதியை ஏற்படுத்திய இந்த நாய் பின்னர் அங்குள்ளவர்களினால் துரத்திப் பிடிக்கப்பட்டு அடித்துக் கொல்லப்பட்டது.

விசர் நாயினால் கடியுண்ட பத்துப் பேருக்கும் ஏ.ஆர்.வி. தடுப்பூசி ஏற்றப்பட்டது.

(ம-5-72)

## மாவை கொல்லங்கலட்டி ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் கோயில் சண்டாளப் பிராயச்சித்தம்

சென்ற வைகாசி மாதம் மஹோற்சவம் தடைப்பட்டதால் 25-03-2001 ஞாயிற்றுக்கிழமை பிள்ளையார் திருவருட் குறிப்பின் பிரகாரம் பிராயச்சித்த அபிஷேகம் நடைபெறும். வழிபடுவோர் நிதி உதவவும்.

அன்று வர விரும்புவோர் புதன்கிழமைக்கு முன் அறிவிக்கவும்.

(85623) - அறங்காவலர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது பேராசானும்

யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதியுமாகிய



### உயர்திரு.தி.கமலநாதன்

அவர்கள் "கலாநிதி"ப் பட்டம் பெற்றமையையிட்டு நாம் அவரைப் பாராட்டுவதோடு மேன்மேலும் அவர் தம் சேவையில் மேன்மையுற வேண்டுமென்று இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

97/98 கல்வியாண்டு ஆசிரிய பயிலுநர்கள்,

(C/15786) வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி.

## மென்பந்து கிரிக்கெற் சுற்றுப் போட்டி

யா/வைத்தீஸ்வரக் கல்லூரி இன்ரறக்ற் கழகம்

நடத்தும் மாபெரும் மென்பந்து கிரிக்கெற் சுற்றுப்போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. போட்டி 6 பேர் கொண்ட 10 பந்துப் பரிமாற்றங்களை உடையதாக அமையும். *விண்ணப்பப் படிவங்களை யா/வைத்தீஸ்வரக் கல்லூரியில் 8.30மணி தொடக்கம் 2.30 வரை பெற்றுக் கொள்ளலாம்.*

விண்ணப்ப முடிவு திகதி 30.03.2001

விளம்பர அன்பளிப்பு:-

சிற்றி தொலைத்தொடர்பு, கணனிச் சேவை,

*11, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.* (85618)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர் **திரு.த.வரதராஜா**

அவர்களின் பாசமிகு மாமியார்

**திருமதி அன்னலக்ஷ்சுமி செல்வரட்ணம்**

அவர்கள் கண்டியில் காலமானதை அறிந்து, துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

ஆசிரியர் வட்டம்,

(85620) யாழ்.மத்திய கல்லூரி.

## கண்ணீர் அஞ்சலி

அமரர்

**முருகேசம்பிள்ளை சிவக்கொழுந்து**

எமது கலாசாலை அதிபா **திரு.மு.பரஞ்சோதி** அவர்களின் தாயார்

**அமரர் மு.சிவக்கொழுந்து**

அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது கலாசாலை விரிவுரையாளர் சமூகம், ஆசிரிய மாணவர்கள், துணை ஆளணியினர் குழு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அஞ்சலி செலுத்துகின்றோம.

விரிவுரையாளர் கழகம்,

*(C/15787)* கோப்பாய் ஆசிரிய கலாசாலை.

# மீன்பிடிக்க அனுமதிக்குமாறு கோரிக்கை

சேந்தாங்குளம், வலித்தூண்டல் ஆகிய பகுதிகளில் மக்களை மீளக் குடியமர்த்தி அப்பகுதிக் கடலில் மீன்பிடித் தொழிலை மேற்கொள்ள அனுமதிக்க வேண்டும் என இடம்பெயர்ந்து வடமராட்சியில் வசிக்கும் அந்தப் பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் ஈ.பி.டி.பி அமைப்பிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மீனவர்கள் சார்பில் சேந்தாங்குளம், வலித்தூண்டல் மீனவர் கூட்டுறவுச் சங்கம் விடுத்துள்ள இக்கோரிக்கையில் மாதகல் பகுதியில் மக்கள் மீள்குடியேறி கடலில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட அனுமதிக்கப்பட்டதுபோல சேந்தாங்குளம், வலித்தூண்டல் கடற்பகுதிகளிலும் மீன் பிடிக்க அனுமதிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-173)

# தேநீர் விருந்துபசாரம்

அகில இலங்கைப் போட்டியில் முதலாமிடத்தைப் பெற்ற யாழ்.மத்திய மாவட்ட முதலுதவிப் படை ஆணையாளர் எஸ்.அருந்தவராசாவையும அவரது குழுவினரையும் பாராட்டி நடத்தப்படும் தேநீர் விருந்துபசாரம் இன்று திங்கட்கிழமை மாலை 3.00மணிக்கு சாரணிய சங்க நிர்வாகக் குழுத் தலைவர் என்.சத்தியநாதன் தலைமையில் திருநெல்வேலி அரசினர் விவசாயப் பயிற்சிப் பாடசாலையில் நடைபெறும்.

இவ்விருந்துபசாரத்துக்கு பலாலி ஆசிரியர் கல்லூரி அதிபர் எஸ்.சதாசிவமூர்த்தி கௌரவ விருந்தினராகக் கலந்து கொள்வார்.

கிளிநொச்சி மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தின் தென்மராட்சி-சாவகச்சேரிப் பிரிவு இதனை ஏற்பாடு செய்துள்ளது. (ஜ-173)

## புலமைப்பரிசில் - 2001

31 ஆவது பரீட்சையில் அதி கூடிய புள்ளி பெற்றோர்.

| | |
|---|---|
| ந.திருத்தணிகன் | - 174 |
| கு.வஜிந்தன் | - 172 |
| (யா.இ.ஆ.பா.) | |
| ஆ.ஜதிகானந்த் | - 168 |
| ச.கோபிகாந்தன் | - 167 |
| (யா.இ.ஆ.பா.) | |
| க.கோகுலன் | - 165 |
| (மகாஜனாக் கல்.) | |

வளர்ச்சி 2 வந்துவிட்டது.

Bond யாழ்நகர். (85619)

ராஜா யாழ்ப்பாணம் (C/15741)

11 அக்கடமி அவாட் பெற்ற சிறந்த படம்

டைட்டானிக் தமிழில்

மாணவர்களும் படக்காட்சி பார்ப்பதற்கு கல்லூரி மூலம் ஆசனங்களைப் பதிவுசெய்து கொள்ளலாம்.

காட்சிகள்: 10.30, 2.30 (பு.நே.)

30.03.2001 முதல் வானத்தைப் போல

லஷ்சுமி இணுவில்

இன்று முதல் விஜயகாந்த் (3வேடங்களில்) மந்த்ரா, செந்தில் நடித்த

சிம்மாசனம்

(ரீலீஸ்) காட்சிகள்: 11.00, 2.30 (பு.நே.)

நாகம்ஸ் சுன்னாகம்

பிரசாந்த், தேவயானி, பிரகாஷ்ராஜ் நடித்த

அப்பு (85458)

(ரீலீஸ்)

காட்சிகள்: 11.00, 2.30 (பு.நே.)

21 முதல் காதலர் தினம்

## க.பொ.த. சாதாரண பரீட்சை-2000 பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களே!

உங்கள் பரீட்சைப் பெறுபேறுகளை உடனுக் குடன் அறிந்துகொள்ள உங்கள் சுட்டெண் விவரங்களுடன் எங்களைத் தொடர்புகொள்ளுங்கள்.

உங்கள் தொடர்புக்கு:

இதோ!

SRIMURUGAN COMPUTER SYSTEMS
COMMUNICATION SERVICE
& AGENCY POST OFFICE

303, K.K.S. Road, Jaffna.
T.P. No. : 0094-21-2670, 3588
Fax : 0094-21-3214
E-Mail : del.smskr@eureka.lk.



(85614)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவன் உரும்பிராய்

ஜெயக்குமார் (ரகு) அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி சிந்தாமணி கண்மணி**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்து கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

யாழ்.பல்கலைக்கழக

B.A. இறுதியாண்டு மாணவர்கள் (வெளிவாரி)

(85617) புதிய உயர் கலைக் கல்லூரி, ஆரியகுளம்.

## 45 ஆம் நாளில் நினைவு கூரலும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



### செல்வன் தயானந்தன் வாகீசன்

வாகீசா!
உன் மழலைச் சிரிப்பும் நீ பயின்ற தளர் நடையும்
இளமைப்பருவத்தின் துடி நடையும் - கண்டு
பொறாமை கொண்ட காலனவன் - உனை
அழைப்பதற்காக மின்சார வடிவிலே
உருவெடுத்தான் - ஆனால்
நீ எம்மை விட்டுப் பிரிந்தாலும்
உன் புன் சிரிப்பும் நீ வைத்த சந்தனப் பொட்டின்
நிழலும் ஐயொன்பது நாள்கள் அல்ல
எத்தனை ஜென்மங்கள் எடுத்தாலும்
எங்கள் நினைவில் என்றென்றும் நிலைத்திருக்கும்!

உன் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

இன்று (19-03-2001) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நிகழும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மற்றும் நண்பகல் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*புது வீதி,* அன்னாரின் பிரிவால் துயருறும்

*ஆறுகால்மடம்.* (85616) - குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவன அதிபர் **திரு.வரதராஜா**

அவர்களின் அன்பு மாமியார்

**திருமதி செல்வரட்ணம் அன்னலக்ஷ்சுமி**

17.03.2001 சனிக்கிழமை அன்று கண்டியில் காலமானதையிட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

ஆசிரியர்கள், அலுவலக ஆளணியினர்,

**The Express Institute** (85613) மாணவர்கள்.

உதயன்

## பிரச்சினைக்குள் பிரச்சினை!

வடமராட்சிப் பகுதி மீனவர்கள் புதிய பிரச்சினை ஒன்றை வெளிப்படுத்தி உள்ளனர். இதனைப் பிரச்சினைகளுக்குள் பிரச்சினை என்று கூறலாம்.

1996 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் வலிகாமம் மக்கள் மீளக் குடியமர்ந்த பின்னர், குடாநாட்டின் பிரதான தொழில்களான விவசாயமும் கடற்றொழிலும் முழு அளவில் நடைபெறவில்லை. இதனை இப் பத்தியில் ஏற்கனவே பல தடவைகள்— அவ்வப்போது — எழுதி வந்துள்ளோம்.

இந்த இரண்டு பிரதான தொழில்களையும் — இப்பகுதி மக்களில் பெரும்பாலானவர்களுக்கு ஜீவனாம்சம் தரும் தொழில்களையும்— ஈழப் போர் மூன்று ஆரம்பித்த 1990ஜூலையில் இருந்து ஐந்து வருடங்களுக்குப் பொருளாதாரத் தடை காரணமாக லாபகரமாகச் செய்ய முடியாதிருந்ததையும் இங்கு ஞாபகப்படுத்தவேண்டும்.

1996 மீளக் குடியமர்வுக்குப் பின்னரோ விவசாயப் பிரதேசத்தின் விஸ்திரணம் சுருங்கிக் கொண்டது. வயல்கள், கமங்களுக்குச் சுதந்திரமாகச் சென்று உரிய வேளையில் சுதந்திரமாகத் தொழில் செய்ய முடியவில்லை. பாதுகாப்புக் கருதிய சோதனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொழில் விருத்தியை மிகவும் மட்டுப்படுத்தி உள்ளன.

கடற்றொழிலை எடுத்துக் கொண்டால், அதற்கான கட்டுப்பாடுகளும் தடைகளும் அனந்தம். உள்ளாடைகளுடன் மட்டுமே கடலுக்குச் சென்று வர வேண்டும் என்ற விசித்திரமான உத்தரவும் சில காலம் நடைமுறையில் இருந்தது! குறிப்பிட்ட நேரத்துக்குப் பிந்தி வந்தால் "பூசை" வாங்கவேண்டிய வேதனையைத் தேடுவதாகும். தொழில் செய்வதற்குரிய நேரத்தில் கடலில் இறங்கத் தடை. இவ்வாறாகக் கடற்றொழிலில் ஈடுபடுவோர் போதிய வருமானம் பெற வழியின்றிக் கஷ்டப்படுகிறார்கள்.

வடமராட்சி வடக்கில் உள்ள நாலாயிரத்துக்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர் குடும்பங்கள் தமது தொழிலைச் சுதந்திரமாகவும் போதிய வருமானம் கிடைக்குமளவுக்கும் செய்யமுடியாதிருப்பது பொதுவான பிரச்சினை; எல்லோருக்கும் தெரிந்த பிரச்சினை.

ஆனால் தமது நாளாந்தத் தொழிற் கஷ்டங்கள்; தொந்தரவுகளை நீக்குவதற்கு உதவுமாறு அமைச்சர் உட்பட்ட மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும்சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் தலைவர்களுக்கு வடமராட்சி கடற்றொழிலாளர்கள் விடுத்த வேண்டுதல்கள் கவனத்தில் எடுக்கப்படவில்லை என்பது மிகவும் விசனத்துக்கு உரியதாகும்.

குடாநாட்டில் சிவில் நிர்வாகம் நடைபெற்றாலும் — அதன் பொருட்டு உயர் அரச அதிகாரிகள் பணிபுரிந்தாலும் — ஜனநாயகம் தழைத்தோங்குகிறது என்று காட்டும் சின்னங்களாக எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவி வகித்தாலும் இவர்களால் பெரிதாக எதனையும் சாதித்து விட முடியாது என்பது ஏற்கனவே தெரிந்ததுதான்; அது வெட்கத்துக்கு உரியதுமாகும். ஆனால் வடமராட்சி கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து எவரும் கருத்தில் கொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டு மிகவும் பாரதூரமானதாகும்.

அப்படியானால் அரசியல்வாதிகளும் அரச அதிகாரிகளும் மக்கள் நலன்களை உதாசீனம் செய்கிறார்கள் என்பதாகும் இது கண்டிக்கப்படவேண்டியது.

# மணல் மண்ணுக்குத் தட்டுப்பாடு; கட்டடப் பணிகள் ஸ்தம்பிதம்

தென்மராட்சி, மார்ச் 19

யாழ். மாவட்டத்தில் அரசினால் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு கட்டட நிர்மாண வேலைகள் மணல் இல்லாததால் ஸ்தம்பிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது

வடமராட்சி கிழக்குப் பகுதியில் உள்ள அம்பன், மணற்காடு ஆகிய பகுதிகளில் மணல் அகழ்வது உதவி அரசாங்க அதிபர் பணிமனையினால் தடை செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்தே நிர்மாணவேலைகள் ஸ்தம்பிதம் அடையும் நிலை ஏற்பட்டுள்ளது. பல கட்டடத் தொழிலாளர்களும் தொழில்களை இழந்துள்ளனர்.

வாகனங்களில் மணல் ஏற்றுவது தடை செய்யப்பட்டுள்ளதால் ஆயிரம் ரூபாவாக விற்கப்பட்ட ஓர் உழவு இயந்திரப் பெட்டி மணல் தற்போது மூவாயிரம் ரூபாவாக விற்கப்படுகிறது. (ஜ-117)

## உலக சாரணர் தினம்

யாழ். மாவட்ட சாரணர் கிளைச் சங்க ஆதரவில் உலக சாரணர் தினம் இன்று திங்கட்கிழமை பி. ப. 2. 30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சமாசத் தலைவர் சீ. வி. கே. சிவஞானம் தலைமையில் நடைபெறும்.

சாரணர் வேலைவாரம் தொடர்பாக தலைமை அலுவலகத்தால் வழங்கப்பட்ட பரிசு யாழ்ப்பாணக் கல்லூரி சாரணர் குழுவுக்கு இன்றைய நிகழ்வின் போது வழங்கப்படவுள்ளதாக யாழ். மாவட்ட சாரணர் ஆணையாளர் டோறஸ் வி. மூ. இராசசிங்கம் தெரிவித்தார். (ம-51)

## கலைப்பீட விரிவுரைகள் இன்று ஆரம்பம்

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களுக்கான விரிவுரைகள் இன்று திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகின்றன என்று துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அறிவித்துள்ளார்.

முதலாம் வருடம் இரண்டாம் அரையாண்டு விரிவுரைகள் இன்று திங்கட்கிழமையும், இரண்டாம் வருடம் இரண்டாம் அரையாண்டு விரிவுரைகள் 21 ஆம் திகதியும் ஆரம்பமாகவுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-185)

## சிறுமியிடம் தங்கநகை கொள்ளை

நெல்லியடி, மார்ச் 19

பட்டப்பகல்வேளை பாடசாலையிலிருந்து வீடு திரும்பிய சிறுமி ஒருத்தியை வழிமறித்த இனந்தெரியாத நபர்கள், அவரது கைகளிலிருந்த 7 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கக் காப்பை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இந்தக் கொள்ளைச் சம்பவம், கடந்த வெள்ளிக்கிழமை முற்பகல் 11. 30 மணியளவில், வல்வெட்டி ஐயத்தி வட்டம் என்ற இடத்தில் இடம்பெற்றது.

வல்வெட்டி விநாயகர் வித்தியாலய முதலாம் ஆண்டு மாணவியான லோகநாதன் ஆதித்தியா(வயது 06)என்பவரிடமிருந்தே, இவ்விதம் காப்பு பறிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து வல்வெட்டித்துறை பொலீஸ் நிலையத்தில் புகாரிடப்பட்டுள்ளது. (ம-109)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 19

வேலணைக் கல்விக்கோட்ட மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி புதன்கிழமை காலை 9 மணியளவில் வேலணை சேர். வை. து. ம. ம. வித்தியாலய மைதானத்தில் வேலணை கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் சோ. தில்லைநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தலைவர் ந. மதனராஜாவும் கௌரவ விருந்தினர்களாக தீவகவலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் வ. இராதாகிருஷ்ணன், வேலணை பிரதேச சபைத் தலைவர் ந. கருணாகரகுருமூர்த்தி, வேலணைப்பிரதேச செயலர் செ. இரத்தினம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். [ம-5]

★ ★ ★

தீவக கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையேயான வலய மட்ட உடற்பயிற்சிப் போட்டிகள் இன்று திங்கட்கிழமை காலை 8-30 மணிக்கு ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

கோட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அணிகள் இதில் பங்குபற்றவுள்ளன. (ம-16)

★ ★ ★

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி கலாசார விளையாட்டு அமைச்சின் விளையாட்டுத் திணைக்களம் யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களிடையே நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள அணிகள் வருமாறு:

★ பளை பிரதேச செயலகம் எதிர் மருதங்கேணி பிரதேச செயலகம்.

★ கரவெட்டி பிரதேச செயலகம் எதிர் உடுவில் பிரதேச செயலகம். (ம-86)

★ ★ ★

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் கோண்டாவில் மறுமலர்ச்சிக் கழகத்தினர் நடத்திவரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் உடுவில் இந்து இளைஞர் வி. கவும், சண்டிலிப்பாய் வசந்தஸ்ரீ வி. கவும் பங்குபற்றுகின்றன. (ம-86)

★ ★ ★

குடத்தனை அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு பாடசாலை அதிபர் த. நவரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மருதங்கேணி கோட்டக் கல்வி அதிகாரி சி. நந்தகுமார் கலந்து கொள்வார்.


## யாழ். வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலய வருடாந்த மஹோற்சவ சிறப்பம்சம்

### பக்தர்க்கருளும் பரமனே பதம் தருவாய்!

ஆலாலமுண்பலன் தன் அருட்சக்தி தன்னுடனே
சீரார் அருள் பொலி சூழ் திருவண்ணை
நகர்தனிலே
ஞானமது புகழ்ந்திடும் வைத்தீஸ்வரப் பதிதனிலே
பாலாம்பிகை உடன் உறை வைத்தீஸ்வர; நின்
கோலாகல முயர் பெருவிழா கண்டு தொழ.
காலாலுன் திருக்கோயில் கடிதே வலம் வந்தோம்
பாலாபிஷேகம் செய்தே பதம் பணிந்தோமையா
பக்தர்க்கருளும் பரமனே பதம் தருவாய்

சோ. இ. பிரணதார்த்திஹரக்குருக்கள்
சிவன் கோயில், யாழ்ப்பாணம்.

(இன்று கொடியேற்றம் — முதலாம் திருவிழா)


## உதயவாக்கு

ஒரு போதும் தவறே செய்யாதவன் ஒரு காரியமும் செய்து கொள்ளமாட்டான்.

## நாளை

பங்குனி 7
செவ்வாய்க்கிழமை
திதி: ஏகாதசி
நள்ளிரவு 12. 27 வரை.
நட்சத்திரம்: உத்தராடம்
காலை 7 - 40 வரை.
ஏகாதசி விரதம்
சுபநேரம்: 10.48—12.18
இராகுகாலம்: 03.18 — 04 48
(பழைய நேரப்படி)

## சமய சந்நிதிகளில்

சண்டிலிப்பாய், மார்ச் 19

பிரசித்தி பெற்ற மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 29 ஆம் திகதி வியாழக்கிழமையன்று ஆரம்பமாக உள்ளது. தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்றுத் தமிழ்ப் புத்தாண்டு தினமான 14 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 15 ஆம் திகதி தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளன. (ம-135)

★ ★ ★

மல்லாகம் ஸ்ரீபத்திரகாளி அம்மன் சமேத வீரபத்திரர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் இடம்பெறும்.

தினமும் மாலை 4 மணி முதல் அபிஷேக ஆராதனைகளும் சுவாமி வீதியுலாவும் நடைபெறும்.

உற்சவ இறுதி நாளான எதிர்வரும் 30 ஆம் திகதி சங்காபிஷேகம், திருக்கல்யாணம், ஊஞ்சல் ஆகியன நடைபெறவிருக்கின்றன. (ஜ—3)

## குழந்தைகளுக்கு ஜீவாகாரம

ஊர்காவற்றுறை, மார்ச் 19

ஊர்காவற்றுறை பிரதேச சபை எல்லைக்குள் வதியும் கர்ப்பிணித்தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள், 2 வயதுக்குட்பட்ட குழந்தைகள் ஆகியோருக்கு மாதாந்தம் சபையினால் சத்துணவு மா பைக்கற்றுக்கள் (ஜீவாகாரம்) வழங்கப்பட்டு வருகின்றன.

அனலைதீவு காரைநகர், ஊர்காவற்றுறை ஆகிய பகுதிகளிலுள்ள வைத்திய சாலைகளில் மாதாந்தம் நடைபெறும் கிளினிக்குகளில் வைத்து இவை வழங்கப்பட்டு வருகிறன.

இதற்கென மாதாந்தம் சுமார் 1,500 பைக்கற்றுக்கள் தேவைப் படுவதாகவும் இவற்றை கொள்வனவு செய்து வழங்குவதற்கென சபை நிதியில் இருந்து 4இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் சபையின் தலைவர் ந. மதனராஜா தெரிவித்தார். (ஜ—16)

## இறை விருப்பத்தை நாடி வாழ்வை நடத்துவோம்

### தவக்காலச் சிந்தனை

ஜெருசலேம் தேவாலயம் ஒவ்வொரு யூதனுக்கும் சமய, சமூக, அரசியல் மையமாக அமைந்த ஒன்றாக இருந்தது. பாஸ்கா விழாவைக் கொண்டாட ஆண்டு தோறும் யூதமக்கள் அங்கே கூடுவார்கள். இயேசுவும் இதற்கு விதிவிலக்கல்ல. அவரும் தம்பெற்றோருடன் அங்கு செல்கிறார். ஆனால் அங்கு நிகழ்ந்த சம்பவம் ஓர் ஆழ்ந்த உண்மையை இன்று கற்பிக்கிறது.

யேசு ஆலயத்தில் தங்கி அங்கு மறை வல்லுநர்கள் சொல்வதைக் கேட்பதிலும் கேள்விகளை எழுப்புவதிலும் செலவிடுகிறார் அவரது பெற்றோர் அவரைக் காணாது தேடி வந்தனர். 'மகனே ஏன் இப்படிச் செய்தீர்' என்று அவரிடம் கேட்டனர். அவர் அளித்த பதில் எல்லோரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. 'நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள் நான் என் தந்தையின் அலுவல்களில் ஈடுபட்டிருக்க வேண்டும்'— என்றார்.

### 20 ஆம் நாள்

கிறிஸ்து இந்த உலகில் வாழ்ந்த போது அவரது உயிர் மூச்சாகவும், உணவாகவும் இருந்தது தனது தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றவே அதற்காகவே அவர் தம் கடைசி மூச்சுவரை வாழ்ந்து சிலுவையில் தன் இன்னுயிரைப் பலியாக்கினார்.

தவக்காலத்தின் 3 ஆம் வாரத்தில் காலடி பதித்திருக்கும் எமக்கும் இருக்க வேண்டிய மனநிலை இதுவே ஆகும். எல்லாவற்றிலும் இறை விருப்பத்தை நாடி எம் வாழ்வை நடத்துவதே ஆகும். 'கிறிஸ்துவில் இருந்த மனநிலையே உங்களிலும் இருப்பதாக' என்ற புனித பவுலின் வார்த்தைக் கொப்ப எங்கள் வாழ்வை அமைத்துக் கொள்வோம். இதற்கு அடித்தளமாக விளங்குவது எங்களில் ஏற்படுகின்ற மாற்றமே. எனவே எம் பாதையை மாற்றியமைக்க வழிசமைப்போம்.

ர. ஜெயராணி

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை
ஊழியர் நலன்புரி சிக்கன கடன் வழங்கு கூ.சங்கம்
(வரையறுக்கப்பட்டது)
[Red, No: J/ 1664 26-05 80]

## சிற்றுண்டிச்சாலை மற்றும் சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தை

நடத்துவதற்கான

## கேள்வி விண்ணப்பம்

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் இயங்கும் ஊழியர் நலன்புரிச்சங்கத்தின் சிற்றுண்டிச்சாலையையும், சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தையும் 01-04-2001 தொடக்கம் 01-04-2002 வரை (ஒரு வருட காலம்) நடத்துவதற்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

எதிர்வரும் 24-03-2001 சனிக்கிழமை பகல் 10.00 மணி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

குறிப்பு:-

சிற்றுண்டிச்சாலை, சைக்கிள் பாதுகாப்பு நிலையம் நடத்துவதற்கான படிவங்களையும், நிபந்தனைகளையும் சங்கக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

டாக்டர் எஸ். கதிரவேல்பிள்ளை
தலைவர்

ஆர். திருஅருட்செல்வம்
செயலாளர்

(சி/15752)



## 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 10 – 10 – 1961

மறைவு 19 – 03 – 1990

### அமரர் பஞ்சலிங்கம் பத்மநாதன்

(B. B. A. Cey.)

(பழைய மாணவன், யூனியன் கல்லூரி;
சமூக சேவை உத்தியோகத்தர், துணுக்காய்)

பதினோர் ஆண்டுகள் பறந்தே போயின;
பதியிலே நாம் இருந்து புலம்பியே வாடுகின்றோம்.
பத்மநாதா! உன் பெயரை உச்சரித்தே
பரமன் தாள் பணிந்து வணங்குகின்றோம்!

பிரிவால் துயருறும்
தாய், சகோதரர், மைத்துனிமார்,
பெறாமக்கள்.

நெசவுசாலை வீதி,
வீமன்காமம்,
தெல்லிப்பழை.

(சி/15763)



## மரண அறிவித்தல்

### திருமதி சின்னம்மா செல்லப்பா

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய் கிழக்கைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னம்மா செல்லப்பா நேற்று (18–03 2001) ஞாயிறு அதிகாலை இறையடி சேர்ந்தார்.

இவர் காலஞ்சென்ற வாரித்தம்பி செல்லப்பாவின் அன்புமனைவியும், பூங்கோதை (Vavuniya), பத்மநாதன் (Rtd. Forman P. C. C Paranthan), பாலசிங்கம் (Rtd S K. Ilmanite Ltd Pulmoddai), கனகலிங்கம் (S. K. Ilmanite Ltd, Chaina bay, Trincomalee), இராஜேஸ்வரி (Canada), கமலாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், மயில்வாகனம் (Vavuniya), தனலட்சுமி, செல்வரட்னம், தவமணி, V. S. துரைராஜா (Canada), குணபாலசிங்கம் (M S O. Jaffna Post Office) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (18-03-2001) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செ. பத்மநாதன்,
செ. பாலசிங்கம்
(மகன்மார்).

தற்காலிக முகவரி:
மே/ பா. மு. சிவசுப்பிரமணியம்,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

(85603)


# பேச்சில் முன்னேற்றம் ஏற்பட்டால் அபிவிருத்திக்கு கணிசமான உதவி

## ஐரோப்பிய ஒன்றியம் வழங்கும்

கொழும்பு, மார்ச் 19

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டு, அதில் முன்னேற்றப் ஏற்பட்டால் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் மீண்டும் அபிவிருத்தி செய்வதற்குக் கணிசமான அளவு உதவியை வழங்கத் தயாராக விருப்பதாக ஐரோப்பிய ஒன்றியத் தலைவர் ரொமானோ புரோடி உறுதியளித்துள்ளார்.

பிரசெல்ஸில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுடன் இடம்பெற்ற உரையாடலின் போதே புரோடி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை—பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வு காணப்படுமென்று தான் நம்புவதாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஐரோப்பிய யூனியனுக்குத் தெரிவித்ததாக ஐரோப்பிய யூனியன் அதிகாரிகளை மேற்கோள்காட்டி பிரசெல்ஸில் பி.பி. ஸிநிருபரொருவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

## வீட்டுப்படியால் வீழ்ந்து குழந்தை மரணம்

கோப்பாய், மார்ச் 19

புத்தூர்ப் பகுதியில் வீட்டுப் படியில் தவறுதலாக விழுந்து பிடரி அடிபட்ட ஒரு வயதுக் குழந்தை ஒன்று, பரிதாபகரமாக மரணமானது.

கடந்த 8 ஆம் திகதி இடம்பெற்ற இச் சம்பவத்தில் புத்தூர் கிழக்கைச் சேர்ந்த இரத்தினம் வைஷ்ணவி என்ற குழந்தையே இவ்வாறு மரணமடைந்தது.

சம்பவம் நடந்தவுடன் அச்சுவேலி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட இக்குழந்தை அங்கிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு எட்டு நாள்களின் பின் கடந்த வெள்ளிக்கிழமை மரணமானது என்று தெரிவிக்கப்பட்டது.

(ம-5-72)

## புனரமைக்கப்பட்ட நெற்கொழுக் குளம் இன்று திறந்து வைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 19

உடுப்பிட்டி வடக்கில் புனரமைப்புச் செய்யப்பட்ட நெற்கொழுக் குளம் இன்று திங்கட்கிழமை மாலை மூன்று மணிக்கு செயர் வதிவிடப் பிரதிநிதியால் திறந்து வைக்கப்படவுள்ளது

இதற்கான ஏற்பாடுகளை கெருடாவில் வடக்கு விவசாயிகள் சம்மேளன பொருளாளர் சிவக்கொழுந்து தேவராஜா மேற்கொண்டுள்ளார்.

ஒரு லட்சம் ரூபா செலவில் மேற்படி குளம் கடந்த வருடம் விவசாயிகளால் புனரமைப்புச் செய்யப்பட்டது

(ம-185)

## சக்கர நாற்காலிகள் அன்பளிப்பு

நெல்லியடி, மார்ச் 19

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஊனமுற்ற இருவருக்கு, சக்கர நாற்காலிகள் வழங்கும் நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை இடம்பெற உள்ளது.

தும்பளையில் இயங்கும் வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் இவ்வைபவம் உதவி அரசாங்க அதிபர் வி. பி. வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெறும்.

நாகர் கோவில் கிழக்கைச் சேர்ந்த, சின்னையா வீரகத்தி, பிள்ளையினார் வள்ளிப்பிள்ளை ஆகிய இருவருக்குமே சக்கர நாற்காலிகள் வழங்கப்படவுள்ளன.

(ம-109)

### மார்புநோய் ஆஸ்பத்திரியில் கடமையாற்றியோருக்கு

## இரண்டு வருடங்களாகியும் ஓய்வூதியம் கிடைக்கவில்லை

சண்டிலிப்பாய், மார்ச் 19

காங்கேசன்துறை மயிலிட்டி மார்பு நோய் வைத்தியசாலையில் கடமையாற்றி ஓய்வு பெற்ற ஊழியர்கள் சிலருக்கு அவர்கள் பதவியிலிருந்து ஓய்வு பெற்று இரு வருடங்களாகியும் இன்னமும் ஓய்வூதியம் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது

மயிலிட்டியிலிருந்து இடம்பெயர்ந்து பல்வேறு இடங்களிலும் கடமையாற்றி வந்த இந்த ஊழியர்கள், ஓய்வூதியம் பெறுவதற்கான சகல படிவங்களையும் உரிய முறைப்படி கொழும்பிலுள்ள மார்பு நோய்த் தடுப்பு இயக்கப் பணிப்பாளர் அலுவலகத்திற்கு அனுப்பி வைத்திருந்தனர் எனினும் இதுவரை அவர்களுக்கான ஓய்வூதியம் அனுப்பப்படவில்லை.

தமக்கான ஓய்வூதியம் நீண்ட காலமாக வழங்கப்படாதிருப்பது குறித்துக் கொழும்பிலுள்ள மார்பு நோய் இயக்கப் பணிப்பாளருக்குப் பல கடிதங்கள் அனுப்பியும் இதுவரை பயன் ஏதும் ஏற்படவில்லை என்று இவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (ம-135)

## மீளக்குடியமரும் மக்களுக்கு கைதடியில் மருத்துவ சேவை

கைதடிப் பகுதியில் மீளக் குடியமரும் மக்களுக்கு மருத்துவ சேவையினை வழங்கும் பொருட்டுக் கடந்த வியாழக்கிழமை அங்கு மருத்துவ சேவை ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சுகாதாரப் பகுதியினால் ஆரம்பிக்கப்பட்ட இந்த மருத்துவசேவை வாராந்தம் திங்கள், வியாழன் ஆகிய இரு நாள்களும் தொடர்ந்து நடத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கைதடி மத்திய மருந்தகப் பொறுப்பதிகாரி டாக்டர் எஸ். சண்முகரத்தினம் தலைமையில் இந்த மருத்துவ சேவை நடைபெறவுள்ளது.

இதேவேளை —கைதடிப் பகுதியில் உள்ள கிணறுகளை இறைப்பதற்கு கமநல சேவைகள் திணைக்களத்தினால் 10 நீரிறைக்கும் இயந்திரங்கள் அங்குள்ள விவசாய சம்மேளனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கிணறுகளை இறைத்துத் துப்புரவு செய்ய விரும்பும் பொதுமக்கள் விவசாய சம்மேளனத்திடம் தொடர்பு கொண்டு நீரிறைக்கும் இயந்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-5-72)

## தேவாலய நிர்மாணவேலைகள் இடைநிறுத்தம்

பண்டத்தரிப்பு புனித பற்றிமா தேவாலய கட்டட நிர்மாண வேலைகள் மணல் இல்லாமையினால் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வடமராட்சியில் இருந்து மணல் எடுத்து வரமுடியாதிருப்பதால் நிர்மாணவேலைகளுக்கு தேவையான மணலைப் பெறமுடியாதுள்ளதாகக் கூறப்பட்டது.

(ம-5)


யாழ். மாவட்ட சாரணர் கிளைச் சங்க
ஆதரவில்

## உலக சாரணர் தினம்

காலம்:-
இன்று (19–03–2001) திங்கட்கிழமை
பிற்பகல் 2. 30 மணி

இடம்:- யாழ். மத்திய கல்லூரி

தலைவர்:- திரு. சீ. வீ. கே. சிவஞானம்

பிரதம விருந்தினர்:- திரு. கு. வைத்திலிங்கம்
(யாழ். மேலதிக அரச அதிபர்.)

சிறப்பு விருந்தினர்:- திரு. க. இராசதுரை
(அதிபர், யாழ். மத்திய கல்லூரி.)

சிறப்புரைகள், குழுக்களின் சிறப்பு நிகழ்ச்சிகள், ஜனாதிபதி விருது, 1 ஆம் வகுப்புச் சின்னம், பரிசில்கள் வழங்கல் ஆகியவை இடம்பெறும்.

அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

யாழ். மாவட்ட கிளைச் சங்கத்தினர்.

அன்பளிப்பு:-
லாவண்யா
பல் மூக்குக் கண்ணாடி அகம்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சி/15785)

# இவர்கள் யார்?

குடாநாட்டில் கடந்த ஒரு தசாப்தத்துக்கும் கூடிய காலம் தீவிரமாகத் தொடர்ந்து கொண்டிருக்கும் போர் வெளியே தெரியாத ஏராளமான சமூகப் பாதிப்புக்களை ஏற்படுத்தி இருக்கிறது.

இந்தப் போரினால் ஏற்பட்ட உயிர், உடைமை அழிவுகள் கொஞ்சநஞ்சமல்ல.

இவற்றின் தொடர் பாதிப்புகள் சமூக மட்டத்தில் ஏற்படுத்தியிருக்கும் வடுக்கள் வெளிச்சத்துக்கு வராமலே தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

போரின் கொடூரம் எங்கள் குழந்தைச் செல்வங்களின் சின்னஞ்சிறிய உலகத்தை சிதைத்து விட்டிருக்கிறது. போரைப்பற்றியோ அதன் கொடுமைகளைப் பற்றியோ அல்லது சமாதானத்தின் வலிமையைப் பற்றியோ எது

# இவர்களது எதிர்காலம் என்ன?

வும் தெரியாத அந்தச் சின்னஞ் சிறுசுகள் வாட்டிவதைக் கப்படுகிறார்கள்.

போரினால் பெற்றோரை இழந்து அநாதைகளாகிய குழந்தைகள், சிறுவர்கள் ஏராளம்.

இவர்கள் எங்கே இருக்கிறார்கள்?

நம் மத்தியில் எப்படி வாழ்கிறார்கள்?

உரிமைகளை இழந்துவிட்ட சமூகத்தில் இவர்களின் உரிமைகள் பேணப்படுகின்றனவா?

இவர்களின் நிகழ்காலமும் எதிர்காலமும் எப்படி மாறிவிட்டிருக்கின்றன?



போரின் கொடிய கரங்களால் ஒரு கணத்தில் - ஒரே வேளையில் - பெற்றோரை இழந்த குழந்தைகள்.

யாருக்குத் தெரியும்?

இவை அனைத்துக்கும் ஓர் எடுத்துக்காட்டாகச் சில சிறுசுகளின் சோகக் கதை ஒன்றை இங்கே வெளிச்சத்துக்குக் கொண்டுவர முயல்கின்றோம்.

இங்கே நீங்கள் படங்களில் காணும் நான்கு குழந்

# இவர்களைப்போல் இன்னும் எத்தனை பேர்?

தைகளின் வாழ்வில் இருள் சூழ்ந்து ஓராண்டு கடந்து செல்கிறது.

இவர்கள் யார்? சரியாகச் சுமார் ஒரு வருடத்துக்கு முன் - இதே மாதம் - போர் மூண்டு பளைப் பிரதேசம் பெரும் ரணகளமாக மாறியிருந்த சமயத்தில் இவர்களின் தலைவிதியை மாற்றி எழுதினான் யுத்தத்தின் வடிவில் வந்த காலன்.

யாழ்.மருத்துவமனையில் பிரசவித்த ஆண் குழந்தை ஒன்றுடன் அதன் பெற்றோர்களான தம்பதியரையும் ஏற்றிக் கொண்டு பளை மாசார் நோக்கிச் சென்று கொண டிருந்த வாடகைக்கு அமர்த்தப்பட்ட ஓட்டோ ஒன்று பெரும் குண்டு மழைக்குள் சிக்கியது. சரமாரியான வேட்டுக்கள் ஓட்டோவை சல்லடை போட்டதில் அந்த ஆண் சிசுவின் பெற்றோர் (கு.சிறீதரன், சி.லோகேஸ்வரி) இருவரும் மற்றும் ஓட்டோ சாரதியும் அந்த இடத்திலேயே பலியாகினர். ஆனால் அந்த ஆண் சிசுவும் அவர்களுடன் பயணம் செய்த பெண் ஒருவரும் அதிர்ஷ்ட வசமாக உயிர் தப்பினர்.

பளையில் போர் மூண்டு மக்கள் போக்கிடம் தெரியாது அங்கும் இங்குமாக ஓடி அல்லற்பட்டுக் கொண்டிருந்த சமயம் இடம்பெற்ற இந்த அனர்த்தம் பற்றிய செய்தி குடாநாட்டு மக்களை அச்சமயம் அதிர்ச்சியடையவைத்தது.

இந்தச் சம்பவம் நடந்து எதிர்வரும் 27-03-2001 அன்றுடன் ஒரு வருடம் கழிகிறது. இந்த அனர்த்தத்தில் உயிரிழந்தோரின் சடலங்கள் மீட்கப்படவே இல்லை. அவற்றுக்கு என்ன நடந்தது என்பது எவருக்கும் தெரியாது.

இச் சம்பவத்தில் பலியான சிறீதரன் - லோகேஸ்வரி தம்பதிகளின் நான்கு குழந்தைகளையுமே படத்தில் காண்கிறீர்கள். துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாகாமல் உயிர் தப்பிய - அப்போது பிறந்து 5 நாள்களேயான - ஆண் சிசு ஜெனாஷனுக்கு இப்போது ஒரு வயது நெருங்குகிறது. மூத்த மகள் சிறீதரன் ஜெயசாந்தினி (13 வயது) இரண்டாவது மகன் சிறீதரன் இராஜனி (வயது 11), மூன்றாவது மகள் சிறீதரன் ஜெயந்தினி (வயது 7).

எதிர்காலம் சூனியமாகிப் போன நிலையில் இந்த நான்கு குழந்தைகளையும், அன்றைய சம்பவத்தில் சூட்டுக்கு இலக்காகி ஒருகை வலுவிழந்து போன நிலையில் உள்ள தனது மனைவி ஜெயலட்சுமியையும் (இவர் குழந்தைகளின் தாயின் சொந்தச் சகோதரி) சிறீதரனின் சகோதரரான மாசாரைச் சேர்ந்த கு.இராமச்சந்திரன் என்பவரே பராமரித்து வருகிறார்.

அமைதியான தனது சொந்த ஊரை விட்டு வெளியேறி இடம்மாறி அலையும் வாழ்க்கையில் இந்தச் சின்னஞ் சிறுசுகளுடன் அவர் படும் சிரமங்கள், அவலங்கள் கொஞ்ச நஞ்சமல்ல.

தனது அவல நிலையை - இந்தச் சின்னஞ் சிறுசுகளின் எதிர்காலம் பற்றிய தனது தீராத கவலையையும் - விளக்கி 'உதயனு'க்கு மடல் வரைந்திருக்கிறார் இராமச்சந்திரன்.

பிள்ளைகளைப் பராமரிக்க உதவி கேட்டு வேறு சில மனித நேய அமைப்புக்களுக்கும் அவர் கடிதங்களை அனுப்பியுள்ளார்.

தென்மராட்சியில் 'வித்தகம்' பரமசாமி சுவாமிகளால் நடத்தப்பட்ட 'வித்தகம்' சிறுவர் ஆதரவு இல்லத்தில்' சிறார்களைப் பராமரிக்கும் கடமையை மேற்கொண்டு வந்த இவர் தனது சொந்தச் சகோதரரினின் பிள்ளைகளைப் பராமரிக்கும் பொறுப்பும் தன்னிடமே வரும் என்று நினைத்துப் பார்த்திருக்கவில்லை.

அநாதைகளாகி விட்ட நான்கு குழந்தைகளின் எதிர்காலம் பற்றிய தனது கவலையைக் குறிப்பிட்டும் அவர்களுக்கு உதவி வழங்க முன்வருமாறு மனித நேய அமைப்புகளுக்கும் மனிதாபிமானமுள்ள நெஞ்சங்களுக்கும் உருக்கமாக வேண்டுகோள் விடுத்தும் அவர் உதயனுக்கு அனுப்பிய பகிரங்கக் கடிதம் நெஞ்சத்தை நெருட வைக்கிறது.

சொந்த இடமான மாசாரை விட்டு இடம்பெயர்ந்து அகதிகளாக துன்னாலையில் விரக்தியோடு வாழ்ந்து கொண்டிருக்கிறோம். காயத்தால் ஊனமடைந்த எனது மனைவியோடு, தாய் தந்தையரை அநியாயமாகப் பலி கொடுத்த 4 குழந்தைகளையும் வளர்த்து உடை, உணவு, கல்வி ஆகியவை வழங்கும் பெரும் பொறுப்பு என்மேல் சுமத்தப்பட்டிருக்கிறது. இடம்பெயர்ந்து உடுத்த உடுப்போடு வடமராட்சியை அடைந்த நாங்கள் அரசு கிள்ளித் தெளிக்கும் நிவாரணம் ஒன்றையே நம்பியிருக்க வேண்டிய நிலை.

இந்நிலையில் எனது தம்பிக்கு கிடைக்க வேண்டிய சம்பள நிலுவைகளை பெற்று பிள்ளைகளை ஆளாக்குவதிலும் மிக காலதாமதமான நிலை. காரணம் முதலாவது மரணம் நடந்த இடத்தில் இருந்து சடலங்களை எடுக்க முடியாமல் போயிற்று. இவர்களின் சடலங்களை யார் எடுத்தார்கள் எப்படி அடக்கம் செய்யப்பட்டன? அடக்கம் செய்யப்பட்டனவா? இல்லையெனில் வீதியோரத்து மிருகங்களுக்கு உணவானதா என்பதெல்லாம் எங்களுக்குத் தெரியாது. எமது இந்து தர்மம் கூறும் ஈமக்கிரியைகள், பிரீதிகள் இவைகள் எவையுமே தேவைப்படாத உன்னத - தெய்வீக மரணம் இது. கணவன் மடிமேல் தலைவைத்து அவருடனே கண்மூடும் மரணங்கள் இதிகாசங்களில் மட்டும் தான் காண்பிக்கப்படுகின்றனவா? இல்லை இலங்கையிலும் தான்- இத்தாவில் சந்தியிலும் தான்.

"எனது இரண்டாவது பிரச்சினை, மன்னார் செயலகத்தில் இருந்து எனது தம்பியின் ஓய்வூதியத்தை பெற்றுக் கொள்ள உரிமையுடைய அவரது மூத்த மகள் சிறீதரன் ஜெயசாந்தினி ஆவணங்களில் உரித்துடைய பராயத்தை அடையாது இருப்பதுதான். ஆகவே நான் அவர்களுக்கு பாதுகாவலராக இருப்பதற்கும், தம்பியின் பணக்கொடுப்பனவுகளைப் பெற்று அவரின் பிள்ளைகள் பராயம் அடையும் வரை நிர்வகிக்கும் தத்துவத்தை தருமாறு நீதிமன்றத்தில் விண்ணப்பம் செய்ய முனைந்து கொண்டிருக்கிறேன். இதில் கால தாமதம் தவிர்க்க முடியாததொன்றாக இருக்கிறது.

"இந்நிலையில் நான் உங்களையும், மனித நேய மிக்கவர்களையும் கேட்டுக்கொள்வதெல்லாம்- எங்க



குண்டுகளால் துளைக்கப்பட்ட ஓட்டோவில் இருந்து உயிருடன் மீட்கப்பட்ட அந்த ஆண் சிசுவுக்கு இப்போது வயது ஒன்று.

ளுக்கு ஆடம்பரமான செலவுகள் - வாழ்க்கை வசதிகள்- எதுவும் வேண்டாம். அத்தியாவசியமான, தமிழர்களில் ஒரே வலிமையான கல்விச் செல்வத்தை இவர்களும் பெறும் பொருட்டு, மாதாந்தம் ஒரு சிறு தொகையை இவர்கள் பெறும் வகையில் ஏதாவது ஒரு நடைமுறையை செய்து இருண்டு போய்க் கிடக்கும் இவர்களுக்கு ஒளி கொடுக்க வேண்டும் என்பதேயாம். எனது சகோதரனின் கொடுப்பனவுகள் கிடைக்கும் பட்சத்தில் நீங்கள் செய்யும் உதவியை நிறுத்தி, எங்களைப் போன்ற நிராதரவாக இருக்கும் மற்றவர்களுக்கும் செய்யலாம். எந்த விதமான தொழிலோ, வருமானமோ அற்ற நிலையில் நான் வாழ்வதால் இதைத் தங்களிடம் கேட்கிறேன். மனித நேயம் மிக்க எத்தனையோ மனிதர்கள் இன்னும் எங்களிடையே இலைமறை காய்களாக இருப்பார்கள் என்ற நம்பிக்கையின் பேரில் - என்று பொதுச்சேவை நிறுவனமொன்றுக்கு எழுதிய கடிதத்தில் அவர் விநயமாகக் கோரியிருக்கிறார். ☆

# வாசகர் திருமுகம்

## பாடசாலை செல்ல வேண்டாம் என்று ஆசிரியர்கள் கூறலாமா?

பாடசாலை மாணவர்கள் அனைவரையும் 12.03.2001 திங்கட்கிழமை பாடசாலைக்குச் செல்ல வேண்டாம் என ஆசிரிய சமூகம் வேண்டுகோள் விடுத்திருந்தது. மாணவர்களைப் பாடசாலைக்குச் செல்ல வேண்டாம் எனக் கூறும் ஆசிரிய சமூகத்தை இங்குதான் பார்க்கின்றோம்.

இடர்க்காலப்படி உரிய காலத்தில் கொடுக்கப்படவில்லை என்பதற்காக பாடசாலைகளைப் பகிஷ்கரித்த அதிபர்களையும் ஆசிரியர்களையும் கொண்டது தான் இந்த ஆசிரிய சமூகம்.

இந்த எழுச்சி மாநாட்டை ஒரு சனிக்கிழமையோ அன்றி ஞாயிற்றுக்கிழமையோ வைத்திருந்தால் கற்பித்தலும், கற்றலும் பாதிக்கப்பட்டிருக்கமாட்டா. பாடசாலை திறந்திருந்தாலும், பூட்டப்பட்டிருந்தாலும் ஒன்று என்ற மனோபாவம் வெளிப்படுகின்றது.

இதேவேளை தனியார் கல்வி நிலையங்கள் யாவும் திறந்திருந்தன. மாணவர்கள் எல்லோரும் சென்றார்கள். எந்த ஒரு தனியார் கல்வி நிறுவன நிர்வாகியோ, ஆசிரியரோ மாணவர்களை வரவேண்டாம் எனச் சொல்லமாட்டார்கள்.

யாழ்.குடாநாட்டு மாணவர்களுக்கு புதிய பாடத்திட்டத்தின்படி தயாரிக்கப்பட்ட புத்தகங்கள் கடந்த ஆண்டு கிடைக்கவில்லை. புத்தகங்கள் இல்லாமலே படித்துப் பரீட்சை எழுதினார்கள். தனியார் கல்வி நிலையங்கள் பல அவர்களுக்குக் கை கொடுத்தன. பாட அலகுகளைப் பிரதி எடுத்து குறைந்த விலையில் மாணவர்களுக்குக் கொடுத்தன. ஆசிரிய சமூகம் என்ன செய்தது? கல்வி நிர்வாகம் என்ன செய்தது?

இந்த ஆண்டும் நிலைமை மாறவில்லை. மூன்று மாணவர்களுக்கு ஒரு புத்தகமாகக் கொடுத்துள்ளார்கள். இந்த நிலையில் இந்த எழுச்சி மாநாடு எதற்காக? யாருக்காக இந்த எழுச்சி? கல்வி வளர்ச்சிக்காக இல்லை என்பது தெட்டத்தெளிவு. பாடசாலைகளை மூடிவிட்டு கல்வியை வளர்க்க முடியாது.

யாழ்.குடாநாட்டு மாணவர்கள் குறுகிய கால இடைவெளியில் மூன்று இடம்பெயர்வுகளைச் சந்தித்துள்ளார்கள். உடல் நிலையும், மனநிலையும், நிவாரணங்கள் கூட நிறுத்தப்பட்டு அல்லல்களை அனுபவித்து வருகிறார்கள்.

எழுச்சி நடத்தும் ஆசிரிய தொழிற்சங்க வாதிகள் என்ன செய்தார்கள்.

பல்கலைக்கழக மாணவ சமூகம் இவ்விடயத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் விதம் போற்றுதற்குரியது. காணாமற் போனவர்களின் குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக பல செயற்றிட்டங்களை மேற்கொண்டுள்ளார்கள். இது ஒரு புனித சேவை.

ஆசிரிய சமூகம் குறுகிய தொழிற்சங்க அரசியலுக்கு அப்பால் சென்று, பல்கலைக்கழக மாணவர்களைப் பின்பற்றி ஆக்கபூர்வமான செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தால் மாணவ சமுதாயம் பயன்பெறும்.

*திருநெல்வேலி வடக்கு.* - **இளைப்பாறிய ஆசிரியர்.**

## ஆங்கில ஆசிரியர் நியமனம்; இப்படி ஓர் ஆலோசனை

இன்று ஆங்கிலம் கற்பித்தல் அத்தியாவசியமாகிவிட்டது. ஆங்கிலம் உலக மொழி, பொது மொழி, தொடர்பு மொழி, வர்த்தக மொழி எனப் பல வகையில் கையாளப்படும் ஒரு மொழியாக உலக அரங்கில் மிளிர்கிறது. இந்த உண்மையை எவராலும் மறுக்க முடியாது.

இன்று இலங்கையிலும் அரசாங்கம் நீண்ட இடைவெளிக்குப் பின் ஆங்கிலத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து சகல துறைகளிலும் கற்பிக்க நடவடிக்கை எடுக்கிறது. இதன் காரணமாகத்தான் பகுதி நேர ஆங்கில ஆசிரிய நியமனங்கள் நடைபெற்று வருகின்றன.

ஆங்கில மொழியில் கற்பித்தல் செய்வதற்கு முன்னர் ஓய்வு பெற்ற அரச ஊழியர்களை பகுதி நேர ஆசிரியர்களாக நியமித்தார்கள். குறைந்த வேதனத்தில் முழு நேரமும், வேலை செய்தார்கள் அவர்கள். இது உண்மையாகவே ஒரு வரப் பிரசாதம். ஒப்பந்த அடிப்படையிலேயே கடமையாற்றினார்கள்.

இவ்வருடத்துக்கு குறிப்பாக இளைஞர்களையே ஒப்பந்த மூலம் வேலைக்கு அமர்த்தியுள்ளார்கள். ஆனால் அவர்கள் ஆங்கில அறிவை சிறுவர்களுக்கு கற்பித்தலில் ஆற்றல் உள்ளவர்களாக இருக்க வேண்டும். இல்லாவிடில் நோக்கம் நிறைவேறாது போய்விடும். இம்முறை வயது எல்லை முறையைக் கொண்டுதான் புதிய பகுதி நேர ஆசிரியர்களை நியமித்ததாக அறிகிறோம்.

இவ்விடயத்தில் ஒரு சிறந்த முறையைக் கையாண்டு இருக்கலாம். இளையவர்களைத் தெரிவு செய்து பின்னர் அவர்களுக்கு ஆங்கிலப் பயிற்சியை அளித்து அதற்குப் பின்பு கற்பித்தலுக்கு அனுமதிக்கலாம். இம்முறையைக் கையாண்டு எதிர்காலத்தில் ஒரு நல்ல கற்பித்தல் முறையை அமுல்படுத்தலாம் எனச் சிந்திக்கலாம்.

வேலை வாய்ப்பு இளையவர்களுக்குக் கொடுத்தல் அவசியம். ஆனால் ஆங்கில அறிவை வருங்கால தமிழ் இளைஞர்களுக்கு கற்பித்தல் என்ற நோக்கம் நிறைவேறாது போய்விடும் என்பது மட்டுமன்றி அத்திவாரம் இல்லாத ஆங்கிலக் கல்விக்கு பின்னடைவே ஏற்படும் என்பது பலரின் கருத்தாக அமைகிறது.

கல்வித் திணைக்களம், வடக்கு-கிழக்கு கல்வி அமைச்சு இந்தப் பேருண்மைகளை ஆராய்ந்து செயற்படல் அவசியம் எனக் கருதுகின்றோம்.

*யாழ்ப்பாணம்.* - பெற்றோர்கள் சார்பில் **இனியவன்**

## மதவடி ஒழுங்கை திருத்தப்படுமா?

யாழ்.காங்கேசன்துறை வீதியில் வண்ணார்பண்ணை தட்டா தெருவுக்குச் சமீபமாக அமைந்துள்ள மதவடி ஒழுங்கை கற்கள் திட்டுத் திட்டாக வந்து ஒரே குண்டுங்குழியுமாகக் காணப்படுகின்றது. இந்த ஒழுங்கையில் இணையதம்பி இந்து வித்தியாலயம் அமைந்துள்ளதால் மாணவ, மாணவிகளும் மற்றும் பாதசாரிகளும் சைக்கிள், மோட்டார் சைக்கிள்களில் செல்வோரும் மிகுந்த சிரமத்தை அனுபவிக்கின்றனர்.

முக்கியமாகக் காலை வேளைகளிலும் நண்பகலிலும் போக்குவரத்து அதிகமான படியால் நெருக்கடி காரணமாக வீதி விபத்துக்கள் ஏற்படும் வாய்ப்புக்களும் அதிகம்.

ஆகவே இந்த ஒழுங்கையைச் செப்பனிட்டு உதவ வேண்டியது மிக அவசியமும் அவசரமுமாகும். காங்கேசன்துறை வீதியால் வருவோர் சிவப்பிரகாசம் வீதியைச் சென்றடைவதற்கு இந்த ஒழுங்கையையே உபயோகிக்கின்றனர்.

பிரதான வீதியிலிருந்து மதவடி ஒழுங்கைக்குத் திரும்பும் வேளை ஆபத்தை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இந்த ஒழுங்கை திருத்தப்பட்டால் ஏராளமானோர் பயனடைவர். செய்வார்களா?

*நாச்சிமார் கோயிலடி.* - **இ.ஸ்ரீதரன்.**

# புலிகளுடன் பேசுவதற்கு முன் வன்னியில் வான் தாக்குதல் ஏன்?

## கூட்டணி எம்.பி. சபையில் கேள்வி

கொழும்பு,மார்ச்19

விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தத் தயார் என்று கூறும் அரசாங்கம் எதற்காக வன்னியில் விமானக் குண்டுத்தாக்குதல் நடத்த வேண்டும்?

இவ்வாறு நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. பொன். செல்வராசா.

வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதத்தின் போதே அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

யுத்தத்துக்கு உத்வேகம் அளிக்கும் வகையில் தற்போதைய வரவு - செலவுத்திட்டம் அமைந்துள்ளது. பாதுகாப்பு செலவீனங்களுக்கென இந்த வரவு - செலவுத் திட்டத்தில் 7 ஆயிரத்து 500 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் ஒருதலைபட்சமாக யுத்தநிறுத்தத்தை அறிவித்துள்ள இந்தவேளையில் பாதுகாப்புச் செலவீனங்களுக்கு இவ்வளவு பணம் தேவையா? போர் நீடிக்குமானால் இன்னும் ஆறுவருடங்கள் அபிவிருத்திப் பணிகளை நிறுத்த வேண்டி வரும் - என்றும் அவர் தனது உரையில் தெரிவித்தார்.(ஐ-7)

## மகனைப் பார்க்கச் சென்றவேளை

# சிறையில் தமிழ்ப் பெண் மீது பாலியல் வல்லுறவு முயற்சி

கொழும்பு,மார்ச்19

வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தனது மகனைப் பார்க்கச் சென்ற தமிழ்ப் பெண் ஒருவரை அங்கு வைத்து கைதி ஒருவர் பாலியல் வல்லுறவுக்குட்படுத்த முயன்றதாகக் கூறப்படுகிறது.

சிறைச்சாலைக்கு அருகே பிரதம சிறைக் காவலரின் வீட்டில் பணிபுரிந்து வந்த மரண தண்டனைக் கைதி ஒருவரே இப்பெண்ணை பாலியல் வல்லுறவுக்குட்படுத்த முயன்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிறைச்சாலை வாயிலில் தனியே நின்ற பிரஸ்தாப பெண்ணை பலாத்காரமாக வீட்டுக்குள் இழுத்துச் சென்ற அக்கைதி அவரை பாலியல் வல்லுறவுக்குட்படுத்த முயன்றபோது அப்பெண் உரத்துக் குரல் எழுப்பியுள்ளார். சத்தம் கேட்டு சிறைக்காவலர்கள் அங்கு விரைந்து சென்று அப்பெண்ணைக் காப்பாற்றியதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## ஊழியர்களுக்கு புதிய சீருடைத்துணி

தென்மராட்சி,மார்ச்19

சுகாதாரத் திணைக்களத்தில் கடமையாற்றும் சிற்றூழியர்களின் உடைகளில் மாற்றம் செய்யப்பட்டதையடுத்து ஊழியர்களுக்கான புதிய சீருடைத்துணிகள் கடந்த வாரம் முதல் வழங்கப்பட்டுவருகின்றன.

ஆஸ்பத்திரிகளில் ஆண் ஊழியர்கள் புதியசீருடையுடன் காணப்பட்ட போதிலும் பெண்ஊழியர்கள் கடந்த வருடம் வழங்கப்பட்ட சீருடைகளுடனேயே காணப்படுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பெண் ஊழியர்களின் சீருடைகள் சேலைக்குப் பதிலாக கவுணாக மாற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளில் பணி புரியும் பொது சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்பநல சேவையாளர்கள் ஆகியோருக்கும சீருடைத் துணிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ம-117)

## கட்டுத்துவக்கு வெடித்து குடும்பஸ்தர் பலி

வவுனியா,மார்ச்19

நெடுங்கேணிப் பகுதியில் கடந்த வெள்ளியன்று கட்டுத்துவக்கு வெடித்ததில 8பிள்ளைகளின் தந்தை ஒருவர் உயிரிழந்தார்.

நெடுங்கேணி தண்டுவனைச் சேர்ந்த இராசையா நாகராசா என்பவரே உயிரிழந்தவராவார். (ஐ-7-164)

## வானொலியில் நேரடி ஒலிபரப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்19

எதிர்வரும் 23ஆம், 24 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள 'வடக்கின் பெரும் கிரிக்கெட் போர்' என அழைக்கப்படும் யாழ்.மத்திய கல்லூரி - பரியோவான் கல்லூரி அணிகளுக்கிடையிலான துடுப்பாட்ட நிகழ்வுகள் கடந்த வருடத்தைப் போலவே இம்முறையும் இலங்கை வானொலி யாழ்.சேவையில் நேரடி ஒலிபரப்புச் செய்யப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-7)

## யுவதிகளின் அ.அட்டைகள் பறிமுதல்

மட்டக்களப்பு,மார்ச்19

மட்டக்களப்பு சுதந்திர மனித அபிவிருத்திக் கழகம் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வு ஒன்றில் கலந்து கொள்வதற்காக கடந்த வெள்ளியன்று வவுனியாவில் இருந்து சென்ற 4 தமிழ் யுவதிகளின் அடையாள அட்டைகள் விசேட அதிரடிப்படையினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

பாத்திமா கபிரியேல் (வயது 22), சாந்தி கபிரியேல் (வயது 21), ஆர். வானதி (வயது 21), எஸ்.அகல்யா (வயது 20) ஆகியோரின் அடையாள அட்டைகளே பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. (ஐ-7-164)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### திரு.ச.வாமதேவன்

(பிரதி அதிபர், யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்)


அவர்கள் இலங்கை அதிபர் சேவையின் தரம் 2-1 இற்குப் பதவி உயர்வு பெற்றமையைப் பாராட்டுவதோடு இவரது கல்விப்பணி மேன்மேலும் சிறப்புற்றுப் பயனடைய வாழ்த்துகின்றோம்.

திரு.க.சி.நமசிவாயம்.
அனுமதி உள்ள நில அளவையாளர்
செல்வி ந.பிரமிளா
சித்திர ஆசிரியர்,
யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயம்.

*193/4, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.*

(85544)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 1927 - 07 - 10

மறைவு 2000 - 02 - 29

### அமரர் வேலுப்பிள்ளை சின்னத்தம்பு

(இளைப்பாறிய ஆசிரியர், கிளி/பளை மத்திய கல்லூரி)

தேசிய உடை அணிந்த முதுதமிழ் ஆசானாய்
மாசிலாக் கல்விப் பணி புரிந்தீர்!
மக்கள் சேவை செய்யவே பல பணிகள் செய்தீர்!
கண்ணை இமை காப்பது போல் எம்மை காத்தீர்கள்
பெருமானின் திருக்கழல்கள் வாசியாகி
நின் ஆன்மா சாந்தி யடைகவென வணங்குகின்றோம்.

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*

அன்பு மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

*தம்பகாமம், பளை.*

(85584)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



பிறப்பு 14 - 02 - 1924

இறப்பு 17 - 02 - 2001

### அமரர் சரவணமுத்து நடராசா

(இளைப்பாறிய பரிசோதகர், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்)

அன்னாரது ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

பாசமிகு எமது தந்தையார் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு எமது துயரில் பங்குகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு எங்கள் இல்லத்தில் இன்று (19.03.2001) திங்கட்கிழமை முற்பகல் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மற்றும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

பெறாமக்களும் பிள்ளைகளும்
மற்றும்
திருமதி இராஜமோகன் ஜெயந்தினி
(ஜேர்மனி),
திருமதி யோகானந்தம் றஜனி
(இத்தாலி)

*புகையிரத நிலைய வீதி, மல்லாகம்.*

(85527)


## வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் 30 ஆண்டுகள் நிறைவையும்

நெற்கொழு விளையாட்டு மைதானத்தின்
50 ஆண்டுகள் பூர்த்தியையும் முன்னிட்டு
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நடத்தப்படும்
யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகள், கழகங்களுக்கிடையிலான
விலக்கல் (நொக் அவுட்) முறையிலான

## மாபெரும் சுற்றுப் போட்டிகள் - 2001

01. பாடசாலைகளுக்கிடையிலான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி (20 ஓவர்கள்)
02. கழகங்களுக்கிடையிலான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி (20 ஓவர்கள்)
03. பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி (11நபர்கள்)
04. கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி (11நபர்கள்)
05. பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி
06. கழகங்களுக்கிடையிலான வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி
07. கழகங்களுக்கிடையிலான கைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி (சர்வதேச முறை - SET UP GAME)
08. பாடசாலைகளுக்கிடையிலான கைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி (சர்வதேச முறை - SET UP GAME)
09. கழகங்களுக்கிடையிலான கைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி (பழைய முறை - OVER GAME)

### போட்டிகளுக்கான நிபந்தனைகளும் விவரங்களும்

01. போட்டிகள் யாவும் வல்வெட்டித்துறை நெற்கொழு விளையாட்டரங்கில் (சுமார் 15 ஏக்கர் நிலப பரப்பில் அமைய இருக்கும்) நடைபெறும்.
02. சனி, ஞாயிறு மற்றும் பொது விடுமுறைத் தினங்களிலேயே போட்டிகள் நடைபெறும். குறிப்பிட்ட போட்டியில் பங்குபற்றும் இரு அணிகளும் சம்மதம் தெரிவிக்கும் பட்சத்தில் வார நாள்களிலும் போட்டிகள் நடத்தப்படும்.
03. பாடசாலை மாணவர்களின் கல்வி பாதிக்கப்படாமல் இருப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டி இருப்பதனால் க.பொ.த. (உயர்தர) பரீட்சையின் பின்னரும் சில போட்டிகள இடம பெறும். விண்ணப்பிக்கும் பொழுது பாடசாலை மாணவர்களாக அல்லது மாணவிகளாக இருந்தவர்கள் க.பொ.த. (உயர்தர) பரீட்சையின் பின்னரும் பாடசாலை அணியின் சார்பில் விளையாட அருகதையுள்ளவர்கள் எனக் கணிக்கப்படுவர்.
04. போட்டிகளுக்கான விண்ணப்பம் வந்து சேரவேண்டிய **இறுதித் திகதி : 16.04.2001**
05. விண்ணப்பக் கட்டணம் : போட்டி ஒன்றுக்கு ரூபா 225/= (வரிகள் உட்பட)
06. விண்ணப்பப்படிவங்களை நகராட்சி மன்ற அலுவலக நேரங்களில் நேரிலோ அல்லது தபால் மூலமோ பெற்றுக்கொள்ளலாம்.
07. ஒரு சுற்றுப்போட்டியில் ஒரு பாடசாலை அல்லது கழகத்திலிருந்து தலா ஒவ்வொரு அணிகள் மாத்திரமே பங்குபெற முடியும். அதாவது ஏ,பி எனப் பங்குபற்ற முடியாது.
08. சகல போட்டிகளிலும் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெறும் அணிகளுக்கும், சிறந்த வீரர்களுக்குமான பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.
09. விண்ணப்பக் கட்டணங்களைப் பணமாகவோ அல்லது காசுக் கட்டளையாகவோ செலுத்த முடியும். காசுக்கட்டளைகள், *'தலைவர், நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை'* என்ற பெயருக்கு (CHAIRMAN, URBAN COUNCIL VALVETTITHURAI) பெறப்படல் வேண்டும். காசுக்கட்டளை மாற்றப படும் தபாற்கந்தோர் வல்வெட்டித்துறை எனவும் குறிப்பிட்டு அனுப்பி வைக்கலாம். பணமாகச் செலுத்த விரும்புவோர் அலுவலகக் காசாளரிடம் அலுவலக நேரங்களில் நேரில் செலுத்தலாம்.
10. பூர்த்தி செய்யப்பட்டுள்ள சகல விண்ணப்பப்படிவங்களும் பதிவுத் தபால் மூலம் காசுக்கட்டளையையும், அல்லது பணம் செலுத்திய பற்றுச் சீட்டின் நிழல் பிரதியையும் இணைத்து *'தலைவர், நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை'* என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.
11. மேலதிக விவரங்களை அலுவலக நேரங்களில் நேரடியாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ (070 - 212962) அறிந்துகொள்ளலாம்.

எம்.கே.சிவாஜிலிங்கம் (J.P.U.M.)
(சமாதான நீதிவானும், உத்தியோகப்பற்றற்ற நீதிபதியும்)
நகர முதல்வர்,
நகராட்சி மன்றம்,
வல்வெட்டித்துறை.

நகராட்சி மன்ற அலுவலகம்,
வல்வெட்டித்துறை,
15.03.2001.

(சி/15773)



உங்கள் பிள்ளைக்கு
இதமான
அரவணைப்பு
தனது பிள்ளைக்கு
சிறந்ததையே
தர விரும்பும்
ஒவ்வொரு
அன்னையரினதும்
ஒரே தெரிவு
பேபி ஷெரமி...
Baby Cheramy
Powder
Cream
Cologne
றூபா பன்முக வர்த்தகம்
104A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
பேபி ஷெரமி

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

215/9, இராசாவின் தோட்டத்தைச் சேர்ந்த வேலாயுதம் யுவராஜசிங்கம் என்பவருடைய விசேட அ.அட்டை (இல.0901007556), பாடசாலை அ. அட்டை என்பன மல்லாகத்துக்கும் மருதனார்மடத்துக்குமிடையில் தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் ஒப்படைத்துதவவும். (85593)

21/7, நாவலர் வீதி, நாவாந்துறை என்னும் முகவரியுடைய இருதய நாதன் வீனஸ் றெஜின் என்பவருடைய தேசிய அ.அ(இல.761414089V), விசேட அ.அ.(இல.0905021282) என்பன 13.03.2001 அன்று கொட்டடி மீன் சந்தையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற் குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைத்து உதவவும். (85586)

சிவன் வீதி, ஆவரங்கால் என்னும் முகவரியைச் சேர்ந்த இராமலிங்கம் தங்கவேலு என்பவரது தேசிய அ.அட்டை (622284332V) யாழ்ப்பாணத்துக்கும் அச்சுவேலிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஸ்ரீ நாகபூசணி அம்மன் பல்பொருள் அங்காடி, சந்தையடி, ஆவரங்கால் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (85582)

17, கன்னார் லேன், நல்லூர், யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த இராசலிங்கம் விஜயகுமார் என்பவரது தேசிய அ.அட்டை (831672381V), விசேட அ.அட்டை (0902014202) இரண்டும் 14.03.2001 அன்று சங்கானைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ராஜா கிறீம் ஹவுஸ், 36, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (85611)

'சிவபுரி' உசன், மிருசுவில் பேரம்பலம் அவர்களின் 500-0094 இலக்கத்தைக் கொண்ட மோட்டார் சைக்கிளின் உரிமைப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம், வரிப்பத்திரம் ஆகியவை நெல்லியடிக்கும் உசனுக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் நெல்லியடி, பருத்தித்துறை வீதியிலுள்ள அருண் புடைவையகத்தில் ஒப்படைத்துதவுக. (85565)

### இலக்கியக் கட்டுரைகள்

A/L மாணவர்களே! சிறுகதை மதிப்பீடு கற்கப்போகின்றீர்களா? 12 சிறுகதைகளையும் "பொருளோ பொருள்" நாடகத்தையும், "வீடற்றவன்" நாவலையும் மதிப்பீடு செய்து எழுதியுள்ளார். எல்லாவகை இலக்கியங்களையும் படைத்த அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை. (84897)

### விற்பனைக்கு

**SANSUI (JAPAN) Amplifier, Cassette, Deck, Equalizer, Tunner, Boxes,** ஆர்மோனியம் **(Double Reads)** என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- **S.** அமலன்,18/2, கோயில் ஒழுங்கை, நாவாந்துறை, யாழ்ப்பாணம் (85538)

### மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, நற்குணமுள்ள, செவ்வாய்க் குற்றமற்ற, சைவபோசனமுள்ள மணமகனுக்கு 30 வயதுக்குட்பட்ட சைவ போசனமுள்ள மணமகள் தேவை. ஜாதகம் மற்றும் குடும்ப விவரத்துடன் தொடர்பு கொள்ளவும். விள.இல. 1243, மே/பா. உதயன். (85571)

### வாடகைக்கு விடப்படும்

இல.489, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள வீடு வாடகைக்கு விடப்படும். சைவமான சிறு குடும்பம் (விரும்பத்தக்கது) அல்லது கல்வி பயில்கின்ற மாணவ மாணவிகளுக்கும் முன்னுரிமை. (85572)

### வாங்கிவிட்டீர்களா?

2001 உங்களுக்கு எப்படி? **சனீஸ்வர** வககிரமும் நிவர்த்தியும் யாருக்கு நன்மை? புத்தாண்டின் பலாபலன்கள், அழகியல் தரம் 1-5 வரை, பொது அறிவு, மொழித்திறன், ஆங்கிலத்தில் கட்டுரைகள் எங்கும் விற்பனையாகின்றன. V.A.சிவராசா வெளியிட்டது என்று கேட்டுவாங்குங்கள். (85573)

### படிவம்

• இலங்கை நிர்வாகசேவைக்கு ஆள்சேர்ப்பதற்கான படிவம் விற்பனையாகின்றது. விலை ரூபா 2/- முடிவு திகதி 09.04.2001. நாயகபாலன், மானிப்பாய். (85585)


## பாராட்டுகின்றோம்

அதிபர் சேவை தரம் 2-1ற்கு பதவி உயர்வு பெற்ற எமது நண்பர்கள்

**திரு.வே.துரைசிங்கம்**
அதிபர் - யா/மாணிக்கவாசகர் வித்தியாலயம், கரவெட்டி.

**திரு.வ.கணேசமூர்த்தி**
அதிபர் - யா/நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை

**திரு.க.தருமகுலசிங்கம்**
அதிபர் - யா/வல்வெட்டி இ.த.க. பாடசாலை

ஆகியோரைப் பாராட்டுவதுடன் அவர்களது சேவை மேன்மேலும் சிறக்க வாழ்த்துகின்றோம்.

- நண்பர்கள்,
அம்சன் ஒளியகம்,
நெல்லியடி.

(85610)

## IT NET COMMUNICATION & NETCAFE

வெளிநாட்டு இணைப்புத் தொலைபேசி அழைப்புக்கள் குறைந்த விலையில்!

- ஒரு வருட அனுபவ சேவை
- ISDN 128 Kb, Speed Line சேவை
- 10 செக்கன்களில் தொடர்பு இணைக்கப்படும்.

மிகவும் துல்லியமான அழைப்புக்களுக்கு உடன் தொடர்புகொள்ளவும்.

T.P. 466752, 466952, 466718, 466918, 384586
**183, Sea Street, Colombo - 11** (85596)

## லாலாவின்

அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு
25.03.2001 ஞாயிறு பிற்பகல் 4.00 மணி
(C/15771)


## வண்ணை வைத்தீஸ்வரன் கொடியேற்றம் இன்று

யாழ்ப்பாணம்,மார்ச்19

யாழ்.வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

எதிர்வரும் 3 ஆம் திகதி மாலை 6 மணிக்கு சப்பறத் திருவிழாவும் 5 ஆம் திகதி காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை 11 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (ம-ரி)

## வவுனியா படைமுகாமில் கூட்டம்

வவுனியா,மார்ச்19

வன்னி மாவட்டத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதற்கான கூட்டம் ஒன்று நாளை செவ்வாய்க்கிழமை வவுனியா இராணுவத் தலைமையகத்தில் இடம்பெறவுள்ளது.

வன்னிப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சாந்த கொட்டகொட தலைமையில் நடக்கும் இந்தக் கூட்டத்துக்கு வன்னியில் பணிபுரியும் நான்கு மாவட்ட அரச அதிபர்களும் அழைக்கப்பட்டுள்ளனர். (ஐ-3)

## அதிபர் சேவை தரம் உயர்வு நேர்முகப்பரீட்சை

யாழ்ப்பாணம்,மார்ச்19

அதிபர் சேவையில் உள்ளவர்களை தரம் உயர்த்துவதற்கான நேர்முகப் பரீட்சைகள் அடுத்த மாதம் 2 ஆம் வாரத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளன.

வடமாகாண அதிபர்கள் சங்கம், இதற்கான ஏற்பாடுகளை வடக்கு அபிவிருத்தி, புனரமைப்பு, புனர்வாழ்வு அமைச்சின் மூலம் கல்வி அமைச்சருடன் தொடர்பு கொண்டு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

## விபத்தில் சாரதி காயம்

யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் இடம்பெற்ற பஸ் - லான்ட்மாஸ்டர் விபத்தில் லான்ட்மாஸ்ரர் சாரதி காயமடைந்தார்.

நேற்றுமுன்தினம் காலை 10 மணியளவில் நாவலர்வீதியும் பிறவுன் வீதியும் சந்திக்கும் இடத்தில் கால்நடை வைத்திய நிலையத்துக்கு முன்பாக இடம்பெற்ற இந்த விபத்தில் லான்ட்மாஸ்டரின் முன்பகுதி பலத்த சேதமடைந்ததுடன் அதனைச் செலுத்தி வந்த அ. ரஜீபன் (வயது 20) என்பவர் முழங்காலில் காயத்துக்கு உள்ளானார். (ம-10-ரி-173)


## பகிரங்க ஏல விற்பனை

வட்டுக்கோட்டை கால் நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் மூன்று ஆட்டுக்கடாக்கள் 21.03.2001 புதன்கிழமை காலை 11 மணிக்கு வட்டு. அரசினர் வைத்தியர் காரியாலயத்தில் பகிரங்க ஏல விற்பனைக்கு விடப்படும். வாங்கியவர் அன்றைய தினமே முழுப் பணத்தையும் செலுத்திக் கடாவை பெற்றுக்கொள்ளவேண்டும்.

**செயலாளர்,**
**வட்டு.கால்நடை**
**வளர்ப்போர் கூ.சங்கம்**
(85602)

## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்மா, வாதநோய்கள், வலிப்பு நோய், பீனிசம், தலையிடி, தலைகால் அவியல், சரும நோய்கள், மாதவடாய்க் குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக் கசிவு, கருவழிதல், மகப் பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்.

*வேலணை*
*வைத்திய கலாநிதி*
**சி.இராசரத்தினம்,**
121, 2ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 2459
(84882)


## நெஞ்சகலா நினைவலைகள்



**செல்வி திருநாவுக்கரசு சுஜிகலா**
(முதலாம் ஆண்டு மாணவி - கலை)

*அன்புடன் அறிவும் பெற்றாய், அழகிய உருவம் கொண்டாய்*
*பண்புடன் பழகி நல்ல அமைதியாய் வகுப்பில் நின்றாய்*
*என்னதான் நடந்த தென்று இதயமே அதிர்ந்து நிற்க*
*எங்களைப் பிரிந்து சென்றாய்; உன்நினைவென்றும் நிற்கும்.*

*பட்டப்படிப்புகள் கல்லூரி,*
*யாழ்ப்பாணம்.*
(85606)
**விரிவுரையாளர்கள்,**
**மாணவர்கள்.**


வேகமாக விற்பனையாகிறது - இலகு தமிழில்

## செயல்முறை கணிப்பொறி

**PRACTICALS IN COMPUTER - கலையார்வன்**

கிடைக்குமிடங்கள்:
**DCS**, பலாலி வீதி, யாழ்./நெல்லியடி.
வசந்தம் புத்தகசாலை, 405, ஸ்ரான்லி வீதி, யாழ்.
மக்மிலன் புத்தகசாலை, பஸ் ஸ்ராண்ட், யாழ்.
மொடேர்ன் புத்தகசாலை, நெல்லியடி.
ஸ்ரீமுருகன் , 303, K.K.S. வீதி, யாழ்.

பிரதி விலை 200/= சொற்ப பிரதிகளே கைவசம் உண்டு.

**V.J.CONSTANTINE / DIRECTOR**
**NEO CULTURAL COUNCIL**
28/1. St.James West Street, Jaffna.
Phone - 3224
(C/15784)

## நிக்சன் அதிர்ஷ்ட முதலீட்டுத் திட்டம்

**நண்பர்களுக்கு மட்டும்**

மாதாந்தக் கட்டுப் பணம் ரூபா 500/=. மாதம் மாதம் 15 ஆம் திகதி அதிர்ஷ்டம் பார்க்கப்படும்.

முதலாவது அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 25000/= உடன் வழங்கப்படும்.

அதிர்ஷ்டத்தின் பின்னர் பணம் கட்டத் தேவையில்லை.

மேலும் (இலவசமாக) 25 பேருக்கு சிறு அதிர்ஷ்டம் பார்க்கப்படும்.

எதிர்வரும் 25.03.2001ஆம் திகதிக்கு முன்பு பணத்தைக் கட்டிப் புத்தகத்தைப் பெற்றுக் கொள்ளவும்.

மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

**நிக்சன் பல்பொருள் வாணிபம்**
(பஸ்நிலையம் முன்பாக)
அச்சுவேலி.
(C/15772)


## மரண அறிவித்தல்

### திருமதி சுப்பையா பொன்னம்மா

சரசாலை மத்தியைப் பிறப்பிடமாகவும் இலண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பையா பொன்னம்மா கடந்த 07-03-2001 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி வாலாம்பிகை தம்பதிகளின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்ற உபதபால் அதிபர் சின்னத்தம்பி மாணிக்கவாசகரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சுப்பையா (ஓய்வுபெற்ற பிரதம தபால் அதிபர்.P.M.G) கொழும்பு) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சிவபாக்கியவதி அம்மாவின் மைத்துனியும், Dr.புவிராஜசிங்கம் (M.B.B.S-லண்டன்) மங்கையர்க்கரசி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவசோதிநாதன் (கணக்காளர்,கனடா) திருமதி புவிராஜசிங்கம் (லண்டன்), புவனேந்திரன் (சாரண இயக்க ஆணையாளர்), அருந்ததி, தெய்வேந்திரன்,(சித்த மருத்துவர்),குலேந்திரன் (இ.மி.சபை சாவகச்சேரி), சறோஜினி ஆகியோரின் மாமியாரும், கண்மணி(ஓய்வு பெற்ற ஆசிரியை), மயில்வாகனம் (ஓய்வுபெற்ற பரிசோதகர் கோண்டாவில் டிப்போசாலை ), முத்து இலட்சுமி, பத்மாதேவி, நடராஜா (சித்தி விநாயகர் தொலைத் தொடர்பு நிலையம்) ஆகியோரின் சிறிய தாயாரும், Dr.நிர்மலன் (இலண்டன்), Dr.சிவாணி (லண்டன்), ஜெனனி (சட்டத்தரணி லண்டன்), சத்தியராஜ் (பொறியியலாளர், கனடா), சிவகாந்தன் (பொறியியலாளர், கனடா), ரமணன்(பொறியியலாளர், கனடா), Dr.சிவசோதி (லண்டன்), மலர்மகள், சுதாஜினி (சுவிஸ்), காண்டீபன் (லண்டன்), கவிதா, கண்ணதாசன், விஜிதா, இராஜேந்திரன், இந்துமதி, பிரபாகரன், சந்திரமதி, பிரபு, யுகந்தன், சஜந்தன், தர்சிகா, குமார் ஆகியோரின் அன்புப்பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (19-03-2001) திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நிரந்தர முகவரி:-
*விசுவர் வளவு,*
*சரசாலை மத்தி.*

தற்காலிக முகவரி:-
*சித்திவிநாயகர் தொலைத்தொடர்பு,*
*நீர்வேலி.*

தகவல்:-
மருமக்கள்
குலேந்திரன், சறோஜினி,
அருந்ததி.

உள்ளூர் **T.P. No- 021-213039,** வெளியூர் **T.P . 0094-70-213039**
(85601)

## விவசாயிக்குப் பாராட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 19

வடமராட்சி ஊரிக்காட்டுப் பகுதியில் சிறந்த ரக வெங்காய உற்பத்தியினை மேற்கொண்ட மயிலியதனை விவசாயி சிவக்கொழுந்து தேவராஜா வடமராட்சி விவசாய சம்மேளனங்களினால் அண்மையில் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

இதேவேளை இவ்வருடம் நாவலடி ஊரிக்காட்டுப் பகுதியில் புகையிலைச் செய்கை வெற்றியளித்துள்ளது.

## ஆலோசனைக் கூட்டம்

மானிப்பாய்—மருதடி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவத்தினை முன்னிட்டு ஆலோசனைக் கூட்டம் ஒன்று இன்று காலை 9.00 மணிக்கு ஆலயத்தில் பிரதேச செயலர் தலைமையில் இடம்பெறும்.

உற்சவகாலத்தில் குடாநாட்டிலிருந்து மருதடி ஆலயத்திற்கு விசேட பஸ்போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தல், சுகாதாரம், மருத்துவம், அன்புலன்ஸ் சேவைகள் ஆகியன பற்றிய முக்கியமான தீர்மானங்கள் இந்தக் கூட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-185)

## போதிய நிதி ஒதுக்கீடுகள் இல்லை

# யாழ். குடாநாட்டுக்கான மின் விநியோகத்தை தொடர முடியாத நிலையில் மின்சார சபை

### மின்சார சபை அதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 19

போதியநிதி ஒதுக்கீடுகள் இல்லாமையால் யாழ்.மாவட்டத்தில் தொடர்ச்சியான மின் விநியோகத்தை மேற்கொள்ள முடியாதுள்ளதாக மின்சார சபையின் வடபிராந்திய பிரதிப் பொது முகாமையாளர் ஆர். முத்துரட்னானந்தம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

1997 ஆம் ஆண்டு யாழ். மாவட்ட மின் விநியோகத்துக்கு என்று 40 கோடி ரூபா நிதிஒதுக்கப்பட்டது. அதற்குப் பின்னர் இதுவரையும் வடபிராந்திய மின்சார சபைக்கு எந்த விதமான நிதி ஒதுக்கீடுகளும் செய்யப்படவில்லை.

இந்த வருடம் 50 கோடி ரூபா நிதியும் 2002 இல் 40 கோடி ரூபா நிதியும் தேவை என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஒதுக்கீடுகள் கிடைத்தால் மட்டுமே குடாநாட்டுக்கு தொடர்ந்து முழுமையாக மின்சாரம் வழங்க முடியும்.

யாழ்ப்பாணத்தில் தற்போது உற்பத்தி செய்யப்படும் மின் அலகுகளில் 40 வீதம் மட்டுமே விற்பனை செய்யப்படுகிறது. மிகுதி 60 வீதமும் சட்டவிரோதமாகப் பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. இதனால் மின்சார சபைக்கு பெருமளவு நட்டம் ஏற்படுகின்றது. இதைவிட நாங்கள் பத்து ரூபாவுக்கு ஒரு மின் அலகினைப் பெற்று 4 ரூபா 50 சதத்துக்கு விற்பனை செய்கிறோம். இதனால் ஒரு மின் அலகுக்கு 5 ரூபா 50 சதம் எமக்கு நட்டம் ஏற்படுகின்றது.

அண்மையில் தென்மராட்சியிலேற்பட்ட யுத்தத்தினால் மின்சார சபைக்கு 60 மில்லியன் ரூபா வரையில் நட்டம் ஏற்பட்டுள்ளது இப்படி அவர் கூறினார்.

(ம-5)

## "ஆச்சேஸ்" விழா

குருநகர், மார்ச் 19

யாழ். மறைமாவட்ட மரியாயின்சேனையினரின் முக்கிய திருவிழாவான "ஆச்சேஸ்" விழா எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ். புனித மரியாள் தேவாலயத்தில் நடைபெற உள்ளது.

(ம-51)

## வடக்கு - கிழக்கில் உள்ள

# உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு மிகக் குறைந்த நிதியே ஒதுக்கீடு

வலி. தென்மேற்கு, மார்ச் 19

வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி அமைப்புக்களுக்கு இந்தவருடம் மிகக் குறைந்தளவு நிதியினையே நிதித்திட்டமிடல் அமைச்சு ஒதுக்கீடு செய்துள்ளதாக வடக்கு — கிழக்கு மாகாண பொதுநிர்வாக, உள்ளூராட்சி, கூட்டுறவு, வீதி அபிவிருத்தி அமைச்சுச் செயலர் க. பரமலிங்கம் தெரிவித்துள்ளார்.

பிரமாண அடிப்படையிலான மூலதன வேலைத்திட்ட நிதியாக கடந்த வருடம் ரூபா10 இலட்சம் ஒதுக்கப்பட்டதாகவும் —

இந்த வருடம் அதன் அரைவாசி — ரூபா 5 இலட்சம் — மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும் —

மேற்படி நிதி ஒதுக்கீட்டினால் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் உள்ள 72 உள்ளூராட்சி நிறுவனங்களும் முழுமையான அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ளமுடியாது பாதிக்கப்படலாம் எனவும் — தெரிவிக்கப்படுகிறது.

## புதிதாக விண்ணப்பித்தவர்களில்

# நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவில் 150 பேருக்கு உதவிப் பணம்

வலி. வடக்கு, மார்ச் 19

நல்லூர்ப் பிரதேச செயலாளர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவதற்கு விண்ணப்பித்திருந்த 150 பேருக்கு இம் மாதம் முதல் அது வழங்கப்படவுள்ளது.

பணம் பெறுவதற்கான அட்டைகள் உரியவர்களுக்கு கிராம அலுவலர்கள் மூலம் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன, எனினும் நிதி வசதிகள் இல்லாததால் கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டு இருந்தன.

கடந்த டிசெம்பர் மாதம் உரிய அட்டைகளைப் பெற்றவர்கள் இந்த மாதம் முதல் தமது பகுதி தபால் அலுவலகங்களில் உதவிப் பணத்தைப்பெற முடியுமென நல்லூர்ப் பிரதேச செயலக சமூக சேவைகள் அலுவலர் க. யோகானந்தராசா தெரிவித்துள்ளார்

(ம-86)

# பொதுச்சேவையில் கண்சிகிச்சைக்கு முன்னுரிமைதரும் லயன்ஸ் கழகங்கள்

## யாழ். ஆஸ்பத்திரிக்கு மருத்துவக் கருவிகள்நாளை அன்பளிப்பு

வடபகுதியில் 1973 ஆம் ஆண்டு யாழ்ப்பாண லயன்ஸ் கழகம் வெள்ளவத்தை லயன்ஸ் கழகத்தால் ஆரம்பிக்கப்பட்டு வடபகுதியில் நலிந்த மக்களுக்குச் சேவை செய்ய ஆரம்பித்தது. தற்போது வடபகுதியில் 17 லயன்ஸ் கழகங்கள் மக்களுக்குப் பல்துறை சேவைகளைச் செய்து வருகின்றன.

உலகிலேயே மாபெரும் சேவை நிறுவனமான சர்வதேச லயன்ஸ் கழகம் 1917 ஆம் ஆண்டு புகழ்பூத்த காப்புறுதி அமைப்பாளர் மெல்வின் யோன்ஸ்ஸனால் ஆரம்பிக்கப்பட்டது. இவர் தான் அங்கம் வகிக்கும் வணிக வட்டம் தன் அங்கத்தவர்களின் நலன்களைக் கவனிப்பது போல், நலிந்த மக்களுக்குச் சேவை செய்யவென்று டாக்டர் வூட் உடன் சேர்ந்து உருவாக்கிய சர்வதேச லயன்ஸ் கழகங்கள் 1917 ஆம் ஆண்டு அமெரிக்க யுத்த காலத்திலும் 1919 ஆம் ஆண்டு அமெரிக்காவில் பரவியஇன்புலுவன்சா காய்ச்சலைக் கட்டுப்படுத்தவும் பெரும் சேவையாற்றின.

அத்தோடு விழிப்புலன் இழந்தோர், வலுவிழந்தோர், கல்வி, சுகாதாரம், சூழல், குழந்தை நலன், இளைஞர் நலன், விவசாயவளர்ச்சி, போதைவஸ்து விழிப்புணர்வு, தலைமைத்துவ வளர்ச்சி, அங்கத்துவ வளர்ச்சி, கிராமிய வளர்ச்சி என்று பல்துறைசார் சேவைகளையும் அவை செய்து வந்தமையால் பிரபல்யமடைந்தன.

1920 ஆம் ஆண்டு கனடாவிலும் 1925 ஆம் ஆண்டு சீனாவிலும் பரவத் தொடங்கிய லயன்ஸ் கழகங்கள் இன்று உலகின் 187 நாடுகளில் 740 மாவட்டங்களாக 44,563 கழகங்களூடாக 1,409,937 அங்கத்தவர்கள் மூலம் சேவைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தப்படுத்தி வருகின்றன.

1925 ஆம் ஆண்டு கண்பார்வையற்ற சீமாட்டி கெலன் நீலாலய ஸ் கழக சர்வதேச மகாநாட்டில் லயன்ஸ் கழகங்களின் செயற்பாட்டைப் பாராட்டிக் கண்பார்வையற்றவரின் இரட்சகர்கள் ஆகுங்கள் என்று அறைகூவல் விடுத்தார்

இதனை ஏற்று நிறுவப்பட்டதே எல். சி ஐ. எவ் (Lions Clubs International Foundation) நிதியம் மூலம் கண்பார்வைக்கு முதலிடம் என்ற செயற்றிட்டமும் இயற்கை அனர்த்தங்களுக்கான உதவியும் லயன்ஸ் கழகங்கள் இயங்கும் நாடுகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. பல நாடுகளுக்கு கண் சத்திர சிகிச்சைக்கென பல கோடி டொலர்கள் நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது.

இலங்கையின் வடபகுதிக்கு எரிந்த நூல் நிலைய புனரமைப்பிற்கென ஆளுநர் தயா விக்கிரமதுங்கவினால் 5000 டொலர்பெறப்பட்டு அன்றை மேயர் இராசா விசுவநாதனிடம் முன்னாள் சர்வதேச லயன்ஸ்கழக இயக்குநர் சக்விசயநாதனால் கையளிக்கப்பட்டது.

1996இல் முன்னேறிப் பாய்தல் நடவடிக்கையால் இடம்பெயர்ந்த மக்களுக்கு வதிவிட வசதிக்கென 10,000 டொலர் நிதியை ஆளுநர் ரசல் அலுவிகார பெற்றுத்தந்தார்.

1998 இல் வவுனியா வெள்ள நிவாரண நிதியாக 10,000 டொலரை ஆளுநர் மலீக்சவீர் பெற்றுத் தந்தார்.

1995 இல் லயன் எஸ் இராமகிருஷ்ணனால் யாழ். போதனா வைத்தியசாலை கண் சத்திர சிகிச்சை மேம்பாட்டுத்திட்டம் ஒன்றுக்கு 5,40,000 டொலர் தேவை என்று திட்டம் ஒன்று முன்மொழியப்பட்டது.

இதனை லயன் கே. வி. முத்துக்குமாரசுவாமி செயற்படுத்துகையில் நிதியின் அளவை குறைக்கும்படி எல். சி ஐ எவ். ஆல் கேட்கப்பட்டு 15-01-96 புதிய விண்ணப்பம் அனுப்பப்பட்டது.

அதுவும் ஏற்கப்படாமல் மூன்றாம் முறையாக 97 இல் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பமும் எதுவித முன்னேற்றம் காணாமல் இருந்தது

இதனை அடுத்து ஆளுநர் லயன் மலீச்சவீர் புதியதொரு விண்ணப்பத்தை (20,9500 டொலர் பெறுமதியானது) அனுப்பி யாழ். நிலைமையையும் யாழ் ஆஸ்பத்திரி கண் பிரிவு மேம்படுத்தப்பட வேண்டிய அவசியத்தையும், அவசரத்தையும் முன்னாள் லயன்ஸ் சர்வதேச இயக்குநர் சக்விசயநாதனின் உதவியோடு எடுத்துக் கூறினார். அதனையும் குறைக்கும்படி எல்.சி ஐ எவ் கேட்க இறுதியாக நிதி 19,0950 டொலராகக் குறைக்கப்பட்டது.

அந்தவேண்டுகோள் ஏற்கப்பட்டு 17 - 05 - 99 இல் 13,5118 டொலர் பெறுமதியான உபகரணங்கள் வாங்க அனுமதிக்கப்பட்டது. அவற்றிலும் நடமாடும் சத்திர சிகிச்சைக்கானவான், குளிரூட்டிகள் என்பன யாழ்.யுத்த நிலைமை காரணமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளது உபகரணங்கள் யாழ். வந்து சேர்ந்துவிட்டன. சத்திர சிகிச்சைக் கட்டடத்தை லண்டன் சிவயோகம் அறக்கட்டளையினர் அமைத்துத் தந்துள்ளனர்.

இந்த உபகரணங்கள் நாளை செவ்வாய்க்கிழமை யாழ். போதனா வைத்தியசாலைக்கு ஆளுநர் லயன் ரோகித உடவந்தவினால் கையளிக்கப்படவுள்ளன. இக் கண் சத்திரசிகிச்சை கூட மேம்பாட்டினால் வருடம் ஒன்றுக்கு 2500 கண்விழிப்படல நோயாளர்கள் நன்மை பெற உள்ளனர்.

### இந் நிகழ்வினால் பெருமையுறுவன

யாழ்ப்பாண லயன்ஸ் கழகம்
மன்னார் லயன்ஸ் கழகம்
வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம்
சாவகச்சேரி லயன்ஸ் கழகம்
கோப்பாய் லயன்ஸ் கழகம்
நல்லூர் லயன்ஸ் கழகம்
மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகம்
சுன்னாகம் லயன்ஸ் கழகம்.
வவுனியா லயன்ஸ் கழகம்
மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம்
கொக்குவில் லயன்ஸ் கழகம்
தீவகம் லயன்ஸ் கழகம்
வவுனியா வட்ட லயன்ஸ் கழகம்
பளை லயன்ஸ் கழகம்
உரும்பிராய் லயன்ஸ் கழகம்
இணுவில் லயன்ஸ் கழகம்.

# விளையாட்டுக் கழகங்களுக்கு உபகரணம் வழங்க ஏற்பாடு

வலி. தென்மேற்கு, மார்ச் 19

யாழ். மாவட்டத்தில் உள்ள விளையாட்டுக் கழகங்களுக்கு வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு, தமிழ் விவகாரங்கள் அமைச்சினால் பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட உள்ளன.

உதைபந்து, ஹொக்கி, ரகர்பந்து, கூடைப்பந்து, கிரிகெட் மட்டை, விக்கெட், ரெனிஸ்பந்து, ஈட்டி மற்றும் பிற உபகரணங்கள் என்பன பிரதேச சபைத் தலைவர்களூடாக வழங்கப்படவுள்ளன.

மேற்படி விளையாட்டு உபகரணங்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள அமைச்சு அலுவலகத்தில் வைத்து யாழ். மாவட்ட பிரதேச சபைத் தலைவர்களுக்கு அண்மையில் வழங்கப்பட்டன.

பிரதேச சபை ரீதியாக மிகத்திறமையாக செயற்படும் விளையாட்டு கழகங்களுக்கும் பொது அமைப்புக்களுக்கும் இந்த உபகரணங்கள் வழங்கப்படவுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

(ம185-)

# இராணுவத்தினருக்கு தமிழ்ப் பாடநெறி

கொழும்பு. மார்ச் 19

கடந்த செவ்வாய்க்கிழமையன்று இராணுவத்தினருக்கான தமிழ்மொழி வகுப்பு இராணுவத் தலைமையகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த 25 நாள் பாடநெறி அரசகரும மொழித் திணைக்களத்தினால் நடத்தப்படுகிறது. இப்பயிற்சி முடிந்ததும் இவர்கள் தொழும்பின் சோதனைச்சாவடிகளில் பணிக்கமர்த்தப்படுவர். 42 பேர்கள் இவ்வகுப்பில் பங்குபற்றுகின்றனர். இதனைத் தொடக்கிவைத்து இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் பலகல்ல பேசுகையில், நாட்டின் சோதனைச்சாவடிகளில் தமிழர்கள் எதிர்கொள்ளும் மொழிப்பிரச்சினைக்கு இது தீர்வாக இருக்கும் என்றும், யாழ்ப்பாணக் குடாநாட்டில் பணிபுரிவதற்கும் இது மிகவும் உதவும் என்றும் தெரிவித்தார். (ஐ)

# அதிபர்களுக்கான நேர்முகப்பரீட்சை அடுத்த மாதம்

யாழ்ப்பாணம், மார்ச் 19

தரம் 2 அதிபர்களை தரம் 1 க்கும் தரம் 3 அதிபர்களை தரம் 2 க்கும் பதவி உயர்த்துவதற்கானநேர்முகப் பரீட்சை அடுத்தமாத நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

வடமாகாண அதிபர்கள் சங்கம் மேற்கொண்ட நடவடிக்கையை அடுத்து இந்த நேர்முகப்பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வடமாகாண அதிபர்கள் சங்கம், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். தவராசா ஆகியோருடன் தொடர்பு கொண்டு நடத்திய பேச்சுக்களைத் தொடர்ந்தே இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

# பலஸ்தீனப் பாடசாலையின் மீது இஸ்ரேலியப் படை குண்டு வீச்சு!

## 6 சிறுவர்கள் படுகாயம்

ஜெருசலேம், மார்ச் 19

மேற்குக் கரைப் பகுதியில் உள்ள பலஸ்தீனப் பாடசாலை ஒன்றின் மீது இஸ்ரேலியப் படையினர் வெடிகுண்டுகளை வீசித் தாக்கியதில் 6 பலஸ்தீன சிறுவர்கள் எரிகாயங்களுக்கு உள்ளாகினர்.

ஹெர்பன் பகுதியில் இஸ்ரேலிய வாகனங்கள் மீது பாடசாலை வளாகத்துக்குள்ளிருந்து கற்கள் வீசப்பட்டதாகவும் —

அதனையடுத்தே தாம் எறிகுண்டுகளை பாடசாலைக்குள் வீசியதாகவும் — இஸ்ரேலிய ராணுவத்தினர் தெரிவித்தனர்.

வன்முறைகளில் இருந்து சிறுவர்களை விலகியிருக்கும்படி கேட்டுக்கொண்டுள்ள இஸ்ரேலிய அதிகாரி ஒருவர் தனது பிரஜைகளின் பாதுகாப்புக்கு எவராவது அச்சுறுத்தல் விடுத்தால் அதற்கு எதிராக இஸ்ரேல் செயற்படும் என்று வலியுறுத்தினார்.

இதேசமயம்—

பலஸ்தீனரால் விடுவிக்கப்பட்ட பகுதிகள் சிலவற்றை மீண்டும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் நடவடிக்கைகளில் இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன் ஈடுபட்டுள்ளதாக பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத்தின் உதவியாளரான அஹமத் அப்துல் ரஹ்மான் கூறியுள்ளார்.

பலஸ்தீனர்கள் மீதான தடைகளில் சிலவற்றை அகற்றுவதாக இஸ்ரேஸ் அறிவித்துள்ள வேளையில் மேற்குக் கரைப் பகுதியில் இரு தரப்பினரிடையே மீண்டும் மோதல் போக்கு உருவாகியுள்ளது குறித்து சமாதான ஆர்வலர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (ஒ-7-6)

# 'தெகல்கார்' நிறுவனத்தை சிக்கலில் மாட்ட முயற்சி

## செய்தியாசிரியர் குற்றச்சாட்டு

புதுடில்லி, மார்ச் 19

இந்திய பாதுகாப்புத்துறையின் ஊழலை அம்பலப்படுத்திய 'தெகல்கார் டொட் கொம்' செய்தி நிறுவனத்தினரை சிக்கலில் மாட்டவைக்க முயற்சிகள் நடைபெறுவதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அந்தச் செய்தி நிறுவனத்தின் தலைமைச் செய்தியாசிரியர் பருண் தேஷ்பால் புதுடில்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் இந்தக்குற்றச்சாட்டைத் தெரிவித்தார்.

ஊழலை அம்பலப்படுத்திய தம்மையும், தனது நிறுவன சகாக்களையும் வேண்டுமென்றே சிக்கலில் மாட்டிவிட பிரதமர் அலுவலகத்தைச் சேர்ந்த சிலர் முயற்சித்து வருவதாக தேஷ்பால் குற்றஞ் சாட்டினார்.

தேசவிரோத சக்திகளுடன் தன்னைச் சம்பந்தப்படுத்துவதற்கும் முயற்சிகள் நடப்பதாக தேஷ்பால் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை —

'தெகல்கார் டொட் கொம்' செய்தி நிறுவனத்திற்கு எதிராக எந்தவித விசாரணைகளையும் தொடங்கப்போவதில்லை என்று இந்திய அரசின் மத்திய நிறுவன விவகாரத்துறை அதிகார பூர்வமாக வெளியிட்ட செய்தியில் கூறப்பட்டுள்ளது.

'தெகல்கார்' நிறுவனத்தின் மீது மத்திய நிறுவன விவகாரத்துறை விசாரணைகளைத் தொடங்க இருப்பதாக பத்திரிகைகள் சிலவற்றில் வெளிவந்த செய்திகளையும் நிறுவன விவகாரத்துறை மறுத்துள்ளது. (ஒ-7-6)

## உலக அரங்கில்

### கடத்தப்பட்ட விமானம் மீட்பு

செச்சினியத் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட ரஷ்ய விமானத்தை சவூதிஅரேபியப் படையினர் அதிரடித் தாக்குதல் நடத்தி மீட்டதுடன் அதில் பணயம் வைக்கப்பட்டிருந்த 120 பயணிகளையும் விடுவித்தனர்.

### இந்திய மீனவர்கள் 72 பேர் கைது!

இஸ்லாமாபாத், மார்ச் 19

பாகிஸ்தானின் சர்வதேசக் கடல் எல்லையை மீறியதாகக் கூறி, அரபுக் கடலுக்கு அப்பால் 11 படகுகளில் சென்ற 72 இந்திய மீனவர்களை பாகிஸ்தானியக் கடற்படை கைது செய்துள்ளது. (ஒ)

### பங்களாதேஷில் பணயக் கைதிகள் விடுவிப்பு

பங்களாதேஷின் சிட்டாகொங் மலைப் பகுதியில் தீவிரவாதிகளால் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருந்த 3 வெளிநாட்டுப் பொறியியலாளர்களும் ராணுவ அதிரடி நடவடிக்கை மூலம் மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக 15 லட்சம் டொலர்களுக்கும் அதிகமான பிணைத் தொகையை தீவிரவாதிகள் கோரியிருந்தது குறிப்பிடத்தக்கது.

## ஆயுதப் பேர ஊழல் தொடர்பாக

# நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்கொள்ள அரசு தயார்

## அமைச்சர் அத்வானி சவால்

புதுடில்லி, மார்ச் 19

பாரதிய ஜனதா தலைமையிலான அரசு மக்களின் நம்பிக்கையை இழந்து விட்டதாக எதிர்க்கட்சிகள் கருதினால் நாடாளுமன்றத்தில் வாஜ்பாய் அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரலாம் என்று மத்திய உள்துறை அமைச்சர் எல். கே. அத்வானி சவால் விடுத்துள்ளார்.



புதுடில்லியில் பாரதீய ஜனதாவின் மூத்த தலைவர்களின் கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் இந்தச் சவாலை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்த அரசு தயாராக உள்ளதாகவும் —

எதிர்க்கட்சிகள் விரும்பினால் நாடாளுமன்றத்தில் முழு அளவிலான விவாதம் நடத்தலாம் என்றும் —

அத்வானி மேலும் தெரிவித்தார், (ஒ-7-6)

## ஊழல்கள் தொடர்பாக

# சமதாகட்சிப் பொருளாளர் மீது பெர்னாண்டஸ் சந்தேகம்

சமதாகட்சியின் முன்னாள் பொருளாளரான கே. கே. ஜெயின் சில ஊழல் பேரங்களில் ஈடுபட்டிருந்ததாக தமக்கு ஏற்கனவே சந்தேகம் இருந்தது என்று முன்னாள் பாதுகாப்பு அமைச்சரும், சமதாகட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவருமான ஜோர்ஜ் பெர்னாண்டஸ் தெரிவித்தார்.

தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் தனது சந்தேகம் குறித்து கூறினார்.

தனது சந்தேகத்தின் காரணமாக, கே.கே. ஜெயினுக்கு பாதுகாப்புத்துறை தொடர்பான நிறுவனங்களில் நுழைவதற்கு அனுமதி மறுக்கப்பட்டதாகவும் பெர்னாண்டஸ் தெரிவித்தார்.

இதே சமயம், முன்னாள் சமதாகட்சி தலைவர் ஜெயா ஜெட்லீ எந்த வித ஊழலிலும் சம்பந்தப்படவில்லை என்றும் பெர்னாண்டஸ் வலியுறுத்தினார். (ஒ-7-6)

## எண்ணெய் உற்பத்தி குறைப்பு

பெற்றோலிய எண்ணெய் வளநாடுகளின் கூட்டமைப்பான 'ஒபெக்' எண்ணெய் உற்பத்தியைக் குறைக்க முடிவு செய்துள்ளது.

ஒஸ்ரியாவின் தலைநகர் வியன்னாவில் நடைபெற்ற 'ஒபெக்' நாடுகளின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட இந்த முடிவால் உலகளாவிய ரீதியில் பெற்றோலியப்பொருள்களின் விலைகள் அதிகரிக்கக்கூடும் என்று கருதப்படுகிறது.

# இந்தியப் பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்பு ஜஸ்வந்த்சிங்கிடம்

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜஸ்வந்சிங்குக்கு பாதுகாப்பு அமைச்சகப் பொறுப்பும் கூடுதலாக வழங்கப்பட்டுள்ளது

பிரதமர் வாஜ்பாயின் சிபாரிசின் பேரில் பாதுகாப்பு அமைச்சகப் பொறுப்பு ஜஸ்வந்த்சிங்கிடம் வழங்கப்பட்டுள்ளதாக நேற்று புதுடில்லியில் வெளியான குடியரசுத் தலைவர் மாளிகை அறிவிப்பு தெரிவித்தது.

'தெகல்கார் டொட் கொம்' வெளியிட்ட பாதுகாப்பு பேர ஊழல் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சராக இருந்த ஜோர்ஜ் பெர்னாண்டஸ் பதவி விலகியதை அடுத்து ஜஸ்வந்த் சிங்குக்கு அந்தப் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதே பிரச்சினையில் மத்திய அமைச்சரவையிலிருந்து திரிணாமுல் காங்கிரஸ்கட்சித் தலைவி மமதா பானர்ஜி, அஜித்பாஞ்சா ஆகியோர் பதவி விலகியதால் ஏற்பட்ட வெற்றிடங்கள் குறித்து எதுவும் இதுவரை கூறப்படவில்லை. (ஒ-7-6)

# பெர்னாண்டஸ் ஆளும் கூட்டணி ஒருங்கிணைப்பாளராகத் தெரிவு

புதுடில்லி, மார்ச் 19

இந்தியாவில் ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் ஒருங்கிணைப்பாளராக முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற தேசிய ஜனநாயகக்கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் கூட்டத்திலேயே பெர்னாண்டஸ் ஒருங்கிணைப்பாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

ஜோர்ஜ் பெர்னாண்டஸின் நேர்மையில் தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சிகள் முழு நம்பிக்கை கொண்டிருப்பதாகவும்—

அவரையே மீண்டும் கூட்டணியின் ஒருங்கிணைப்பாளராகத் தெரிவு செய்வதாகவும்—

கட்சிகள் கூட்டாகத் தெரிவித்துள்ளன. (ஒ-7)

# விமானம் மலையில் மோதியதில் அங்கோலாவில் 16 பேர் பலி!

அங்கோலாவின் உள்ளூர் சேவை விமானம் ஒன்று மலையில் மோதி விபத்துக்குள்ளானதில் 16 பேர் உயிரிழந்தனர். நேற்று முன்தினம் ருவாண்டாவில் இருந்து கியூலா மாகாணத் தலைநகர் வியூபென்கோவுக்கு சென்றுகொண்டிருந்த சிறிய ரக பயணிகள் விமானமே விபத்துக்குள்ளாகியது.

வியூபென்கோவை விமானம் நெருங்கிக் கொண்டிருந்த சமயம் கடுமையான மழை பெய்து கொண்டிருந்ததாகவும் —

அதன் காரணமாகவே விமானம் மலையில் மோதி விபத்துக்குள்ளானதாகவும் — விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

விபத்துக்குள்ளான விமானத்திலிருந்து பணியாளர் ஒருவர் மட்டும் உயிர் தப்பியுள்ளதாகவும் அவர்கள் கூறினார்கள். (ஒ-7-6)

# சேது சமுத்திரத் திட்டம் குறித்து கருணாநிதி

சேதுசமுத்திரத் திட்டம் நிறைவேறினால் தென்மாவட்டங்கள் பூலோக சொர்க்கமாகிவிடும் என்று தி. மு. க. தலைவரும், தமிழக முதல்வருமான கருணாநிதி தெரிவித்துள்ளார்,

மத்திய அரசு அனுமதித்துவிட்டால் சேது சமுத்திரத் திட்டப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுவிடும் என்றும் அவர் கூறினார். (ஒ)

# ஆர்ப்பாட்டக்காரர்களுடன் இத்தாலிப் பொலீஸார் மோதல்

ரோம், மார்ச் 19

உலகமயமாக்கலுக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கும் பொலீஸாருக்கும் இடையில் ஏற்பட்ட கடும் மோதலில் 7பொலீஸார் உட்பட 11 பேர் காயமடைந்தனர்.

இத்தாலியின் லீபென்ஸ் நகரில் உலகமயமாக்கலுக்கு ஆதரவான மாநாடு இடம்பெற்றுக்கொண்டிருந்த கட்டடத்தின் வெளியே ஆயிரக்கணக்கில் திரண்ட எதிர்ப்பாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அந்தச் சமயத்தில் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் அங்கிருந்த பொலீஸ்காரர்களுக்கும் இடையே திடீரென்று கடும் மோதல் ஏற்பட்டது.

கற்கள் உட்பட கையில் கிடைத்தவற்றால் ஆர்ப்பாட்டக்காரர்கள் தாக்கியதாகவும் பொலீஸார் கண்ணீர்ப் புகைக்குண்டுப் பிரயோகம் நடத்தியதாகவும் கூறப்படுகிறது.

இந்த மோதலில் 7பொலீஸ்காரர்களும், 4 ஊடகவியலாளர்களும்காயங்களுக்குள்ளாகி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

20 நிமிடநேரம் இடம்பெற்ற இந்த மோதலையடுத்து சுமார் 100 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஒ-7-6)

# அதிக தொகுதிகள் கோரி ம. தி. மு. கவினர் ஆர்ப்பாட்டம்

எதிர்வரும் தமிழக சட்டப் பேரவைத் தேர்தலில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு அதிக தொகுதிகளை ஒதுக்கும்படி வலியுறுத்தி அக்கட்சியின் தொண்டர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

சென்னையில் ம. தி மு. க. தலைமையகம் உள்ள 'தாயகம்' கட்டடத்தின் முன்புறம் கட்சிக்கொடிகளை ஏந்தியபடி இவர்கள் தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

தேசிய ஜனநாயகக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் ம. தி. மு. க. 25 தொகுதிகளைக் கோருவதாகவும்—

ஆனால், கூட்டணிக்குத் தலைமை வகிக்கும் தி.மு. க. இருபதுக்கும் குறைவான இடங்களைத் தரவே முன்வந்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதற்கிடையில்—

ம. தி. மு. க. தேர்தலில் தனித்துப் போட்டியிட வேண்டும் என்று வலியுறுத்தி சென்னையில் பல இடங்களிலும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

# நியாயமான விட்டுக் கொடுப்புகளுடன் பேச்சுக்கு ஆயத்தமாயிருக்கின்றோம்

## பேராசிரியர் பீரிஸ் கூறுகிறார்

கொழும்பு, மார்ச்19

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான பேச்சுக்குப் புதிய அரசமைப்பு நகல் யோசனைகள் அடிப்படை ஆவணமாக இருக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை அரசு கொண்டுள்ள போதிலும் விடுதலைப்புலிகளின் கோரிக்கைகளையும் கவனத்துக்கு எடுத்து நியாயமான விட்டுக் கொடுப்புகளுடன் பேச்சைத் தொடங்க ஆயத்தமாக இருக்கின்றோம்.

அரசமைப்பு விவகார, கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டுச் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இப்படிக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசாங்கம் தனது நிலைப்பாட்டில் விடாப்பிடியாக நிற்கவில்லை. புலிகளின் கோரிக்கைகளையும் பரிசீலிக்கத் தயாராக உள்ளது.

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் பேச்சு ஆரம்பிக்கப்பட்டால் அந்தப் பேச்சு இடை நடுவில முறிவடையக் கூடிய சாத்தியக் கூறுகள் பெரும்பாலும் குறைவு.

1995ஆம் ஆண்டு இடம்பெற்ற பேச்சுக்கள் முறிவடைந்தமைக்கு பல காரணங்கள் உண்டு.

அரசும் புலிகளும் நேரடியாகப் பேச்சு நடத்தியமை, இனவாதிகளின் கை ஓங்கி இருந்தமை சர்வதேச ஒதுழைப்புக் கிடைக்காமை ஆகிய காரணங்களினாலேயே பேச்சு தோல்வியில் முடிந்தது.

இப்போது அந்தச் சூழ்நிலை இல்லை. கைதேர்ந்த மூன்றாம் தரப்பு தற்போதைய சமாதானப் பேச்சு முன்னெடுப்பில் கைகொடுக்க முன்வந்துள்ளதால் பேச்சுக்கள் தோல்வியடைய நியாயமில்லை.

மேலும் சர்வதேச சூழல் அமைதியை ஏற்படுத்தப் பச்சைக் கொடி காட்டி வருகின்றது. அத்துடன் இலங்கையில் அரசியல் முனைப்பு வலுவடைந்து மிதவாதிகளின் திடமான போக்கு கூர்மையடைந்துள்ளது- இப்படி அமைச்சர் தெரிவித்தார்.

(ஐ-3)

# போரில் அரசு வெற்றி பெறுவதற்கு படைகளை வலுப்படுத்துவது அவசியம்

## விஞ்ஞானத்துறை அமைச்சர் லெஸ்லி குணவர்தன நாடாளுமன்றில் பேச்சு

கொழும்பு,மார்ச்19

யுத்தத்தில் வெற்றிபெற ஆயுதப் படைகளை வலுப்படுத்துவது அவசியம். இந்த யுத்தத்துக்குத் தீர்வு கண்டாலே பொருளாதாரத்தில் அபிவிருத்தி காணமுடியும். போரும் பொருளாதாரமும் மிக நெருங்கிய தொடர்புடையவையாக இங்கு உருவாகியுள்ளன என்று விஞ்ஞான தொழில்நுட்பத் துறை அமைச்சர் பேராசிரியர் லெஸ்லி குணவர்தன சனிக்கிழமை நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டுச சட்ட விவாதத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த வருட நடுப்பகுதியில் வடக்கு-கிழக்கின் அனேக பகுதிகளை இழந்து விடுவோமோ என்ற அச்சம் ஏற்பட்டபோது ஜனாதிபதி ஆயுதப்படைகளை வலுப்படுத்துவதற்கான முக்கியமான தீர்மானத்தை எடுத்தார். நாம் யுத்தத்துக்குத் தீர்வு கண்டு சமாதானத்தை மீளக் கட்டி எழுப்ப ஒன்றுபட வேண்டும். இல்லாவிடில் அதிகரித்துள்ள பாதுகாப்புச் செலவினத்தை கட்டுப்படுத்த முடியாமல் போய்விட்டால் பொருளாதாரத்திலும் மீட்சிபெற முடியாது. அரசை விமர்சிக்கும் எதிரணியினர் மாற்றுக் கொள்கைகளை முன்வைக்க வேணடும். நாடு அரசுக்கு மாத்திரம் சொநதமானதல்ல. எதிரணிக்கும் இந்த நாடு உரித்துடையது. ஆகவே ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும் - என்று தெரிவித்தார்.

### ஜோன் அமரதுங்க

கம்பஹா மாவட்ட ஐ.தே.க. உறுப்பினர் ஜோன் அமரதுங்க தமது உரையில் தெரிவித்ததாவது:-

அரசின் சமாதான முயற்சிகளுக்கு ஐ.தே.க. முழுமனதுடன் ஆதரவளிக்கும். ஆனால் இந்த நடவடிக்கைகள் தொடர்பாக பகிரங்கத் தன்மையைப் பேணவேண்டும்.

வரவு செலவுத் திட்டத்தினால் ஆளும் கட்சி உறுப்பினர்கள் பலர் தமது தொகுதிகளுக்குப் போக முடியவில்லை. மோசடிக்கு கைதேர்ந்த இடமாக இலங்கை மின்சார சபை உள்ளது. அரசியல் வாதிகளுக்குத் தெரிந்தோ தெரியாமலோ இது நடக்கிறது.

மக்கள் மேலதிகமாக 25 சதவீதக கட்டணத்தை மின்சாரக் கட்டணமாகச் செலுத்துகின்றனர். நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை நியமித்து முறைகேடுகளை விசாரிக்க வேண்டும். ஒருபுறம் ஊழல், மறுபுறம் தாமதம் என்பவை அரச நிர்வாகத்தில் காணப்படுகின்றன - என்றார்.

(ஐ)


## வெற்றிடங்கள்

### பனை அபிவிருத்திச் சபை - திக்கம் வடிசாலை

மேற்படி வடிசாலையில் பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

* கொதிகலன் இயக்குநர்.
* வடிகலன் இயக்குநர்.
* கொள்வனவு உத்தியோகத்தர்.
* களஞ்சியப் பொறுப்பாளர்.
* பாதுகாப்பு உத்தியோகத்தர்.
* காரியாலய உதவியாளர்.
* சாரதி.

மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் பனை அபிவிருத்திச்சபையின் திக்கம் வடிசாலைப் பொது முகாமையாளருடன் உடன் தொடர்புகொள்ளவும்.

*திக்கம் வடிசாலை,*
*திக்கம்.*

- பொது முகாமையாளர்.

(C/15789)



## 2 ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 08 - 01 - 1942



மறைவு 12 - 03 - 1999

### அமரர் தம்பிப்பிள்ளை கணேசராசா

(C.T.B. காப்பாளர்)

காலன் காலடி வைத்தான் அன்று
காலச்சக்கரம் சுழன்றதால் இன்று
ஈராண்டு சென்றதே உம்முடல் கொண்டு - ஆனால்
என்றுமே இருப்பீர் எம்முடன் இங்கு.

*பாடசாலை வீதி,*
*நாவற்குழி.*
தற்காலிக முகவரி:-
*பாரதி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(C/15790)


### கிரிக்கெட் பயிற்சியில் மாணவன் காயம்

தென்மராட்சி,மார்ச்19

கிரிக்கெட் பயிற்சியின் போது படுகாயமடைந்த மாணவன் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வெள்ளியன்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் உடுப்பிட்டி அ.மி.த.க.பாடசாலை மாணவனான தவராசசிங்கம் சசிகரன் (வயது 17) என்பவரே காலில் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவராவார்.

(ம-117)

## கல்விச்சாலைக் காட்சிகள்



கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றது.

பாடசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட பான்ட் வாத்தியக் குழுவினரின் அணிவகுப்பு மரியாதையை கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சிவஞானசுந்தரம், பாடசாலை அதிபர் ந.சிவகடாட்சம், கோப்பாயப் பிரதேச செயலக நிர்வாக அலுவலர் எஸ்.விரசிங்கம் மற்றும் வலி.கிழக்கு பிரதேசசபைத் தலைவர் பூ.குணசிங்கம் ஆகியோர் ஏற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம். (ம)



கரணவாய் பொன்னம்பல வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி கடந்த மாதம் நடைபெற்றது.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜாவை மாணவர் ஒருவர் மாலை அணிவித்து வரவேற்பதையும், அருகில் பிரதமவிருந்தினரான வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.சிவராஜா மற்றும் அவரது துணைவியார் ஆகியோரையும் படத்தில் காணலாம்.



யாழ்.மத்திய கல்லூரியின் 185 ஆவது ஆண்டு நிறைவினை ஒட்டி 10 மைல் விதியோட்டப் போட்டி அண்மையில் நடத்தப்பட்டது.

இப்போட்டியை கல்லூரி அதிபர் க.இராசதுரை கல்லூரிக் கொடியை ஏற்றி ஆரம்பித்து வைப்பதையும், அருகில் கல்லூரி உப அதிபர் ஓங்காரமூர்த்தி மற்றும் கல்லூரி ஆசிரியை திருமதி பி.பாலசுந்தரம்பிள்ளை ஆகியோரும் காணப்படுகின்றனர். (க-5)



வண்ணை ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் இடம்பெற்றது.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட பாடசாலையின் பழைய மாணவியும் புதிய உயர் கல்லூரி அதிபருமாகிய திருமதி அருள்நங்கை சண்முகநாதன் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம்.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்ப்பாணக் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கமலா சுப்பிரமணியம் மற்றும் வித்தியாலய அதிபர் கதிர் செல்வ நாயகம் ஆகியோரும் உடனிருக்கின்றனர். (ம)

# மக்கள் விருப்பத்தை வெளிப்படுத்தவே மாணவரின் மகஜரில் ஒப்பமிட்டேன்!

## மகேஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு,மார்ச்19

மக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும் நோக்குடனேயே யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின் மகஜரில் ஒப்பமிட்டேன்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஐ.தே.கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன்.

விடுதலைப் புலிகளைத் தடைசெய்யக்கூடாது என்று வலியுறுத்தி பிரிட்டனுக்கு அனுப்புவதற்காக யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் தயாரிக்கப்பட்ட மகஜரில் நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் அண்மையில் ஒப்பமிட்டிருந்தது தெரிந்ததே.

நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் வரவு செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போது மாணவரின் மகஜரில் தான் ஒப்பமிட்டது குறித்து மகேஸ்வரன் பிரஸ்தாபித்தார்.

அவர் அப்போது கூறியதாவது:-

மக்களின் பிரதிநிதி என்ற வகையில் அவர்களின் அபிலாஷைகளை வெளிப்படுத்த வேண்டிய தேவை எனக்குள்ளது. இதனை அந்த மகஜரில் கையொப்பமிட்டதன் மூலம் நான் நிறைவேற்றியுள்ளேன்.

விடுதலைப் புலிகள் மீதான பிரிட்டனின் தடை இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஒருபோதும் உதவப்போவதில்லை.

சமாதானப் பேச்சுக்களில் ஈடுபடுவதற்கான தமது விருப்பத்தை மூன்று மாதங்களுக்கு முன்னரேயே விடுதலைப் புலிகள் அறிவித்திருந்தனர். ஆனால அரசாங்கம் புலிகளின் அறிவிப்பை சாதகமாகப் பயன்படுத்தவில்லை.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தனது வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதற்காகவே தமிழ் மக்களைக் காட்டிக் கொடுக்கும் வேலையை மேற்கொண்டு வருகின்றார்.

வெளிநாடுகள் விடுதலைப்புலிகள் அமைப்பைத் தடைசெய்ய வேண்டுமென அவர் உரத்துக் கோரி வருவது தன்னுடைய பதவியைத் தக்க வைத்துக் கொள்வதற்காகவே ஆகும்.

- என்று மகேஸ்வரன் தெரிவித்தார். (ஐ-7-3)

## இடம்பெயர்ந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அகற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால் மக்கள் சொந்த இருப்பிடங்களில் குடியமர்வதற்கு அவசரப்படவேண்டாம்.

யுத்தம் நடைபெற்ற பகுதிகளில் குடியிருப்புகள் பெருமளவு உள்ளதால் மிதிவெடி, கண்ணிவெடிகளை அகற்றும் பணிகள் மிக அவதானமாகவே நடைபெற்றுவருகின்றன. மக்களின் உடைமைகளை மீட்பதற்கு வசதியாக மிதிவெடிகள் அகற்றப்பட்ட பகுதியில் கூட பொதுமகன் ஒருவர் மிதிவெடியில் அகப்பட்டு காலை இழந்துள்ளார். இதுபோன்ற சம்பவங்கள் இடம்பெறாமல் இருப்பதற்காக மக்கள ஏப்ரல் மாத கடைசிவாரம் வரை பொறுத்திருகக வேண்டும்.

பொதுமக்களை இப்பகுதிகளுககு அழைத்துச் செல்வது இடைநிறுத்தப்பட்டுள்ளதால் கொடிகாமம் சிவில் நிர்வாக அலுவலகத்தில் விண்ணப்பங்கள் ஏற்பதும் நிறுத்தப்பட்டுள்ளது. எனினும் இதுவரை வர்த்தக நிலையங்களிலும், அரச நிறுவனங்களிலும் உடைமைகளை மீட்காதவர்கள் குறிப்பிட்ட அந்த இடங்களுக்கு மட்டும் அழைத்துச் செல்லப்படுவர்.

மக்கள் மீளக் குடியமர்த்தப்படும் வேளையில் அங்கு இயங்கிய அனைத்து திணைக்கள நிறுவனங்களும், வர்த்தக நிலையங்களும் இயங்குவதற்கு அனைவரும் ஆயத்தமாக இருக்கவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

மக்கள் தமது சொந்த இருப்பிடங்களுக்குத் திரும்புவதற்கு முன்னர் அவர்களின் உடைமைகள் நாவேலி தரவை ஊடாகச் செல்லும் திருடர்களால் அபகரிக்கப்பட்டு விடக்கூடும். எனவே திருடர்கள் இப்பகுதிக்கு வருவதைக் கட்டுப்படுத்தவேண்டுமென கிராம அலுவலர்கள் பலர் அங்கு பிரஸ்தாபித்த போது, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென உறுதியளிக்கப்பட்டது. (ஐ-117)


**க.பொ.த. சாதாரண பரீட்சையில் தோற்றிய மாணவர்களின் கவனத்துக்கு!**

கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த. சாதாரண பரீட்சை முடிவுகளை நீங்கள் உடனுக்குடன் அறிந்து கொள்ள உங்களது பெயர், சுட்டெண்ணுடன் தொடர்பு கொள்ள:

**அம்பாள் தொலைத் தொடர்பு நிலையம்**

கம்பஸ்லேன் திருநெல்வேலி. T.P.2742

**விக்னா கல்வி நிறுவனம்**

52,ஸ்ரான்லி றோட், யாழ்.

O/L DAY CLASS

பிரிவு 2 ஆரம்பம்:-22-03-2001 (8.30 -2.00)

இவ் வருடம 6 பிரிவுகள் மட்டுமே ஆரம்பிக்கப்படும். (85575)


## அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாலசிங்கத்துக்கு விளக்கிக் கூறியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தற்சமயம் விடுதலைப் புலிகள் அறிவித்துள்ள யுத்தநிறுத்தத்தை மேலும் ஒருமாதத்துக்கு நீடிக்கும் வாய்புகள் குறித்தும் அன்ரன் பாலசிங்கத்துடன் பேசியதாகவும் அறிய வந்தது. (ஐ-3)

## ஸ்ரீலங்கா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தப்பியோடிப் பின்னர் சரணடையும் படையினரை சாதாரண படையினரை நடத்துவது போன்றே நடத்துமாறு இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல அதிகாரிகளுக்குப் பணித்திருக்கிறார்.

படைகளில் இருந்து தப்பியோடியோரில் சுமார் 3,500 பேராவது மீண்டும் வந்து இணைந்து கொள்வார்கள் என்று இராணுவத் தலைமையக வட்டாரங்கள் கூறுகின்றன.

- இவ்வாறு 'சண்டே ஐலண்ட்' பத்திரிகை தெரிவித்துள்ளது. (ஐ-20)

## சொல்ஹெய்ம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு கட்டத்தில் அதில் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் கலந்து கொள்ள வேண்டும் என்பதில் அரசு மிகுந்த அக்கறையாக இருக்கிறது. சமாதானப் பேச்சுக்கள் மடு தேவாலயப் பகுதியில் இடம்பெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்தகவல் தூதர் சொல்ஹெய்முக்கு தெரிவிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. பொருளாதாரத் தடைகள் நீக்கப்படுமானால் தென்பகுதி மீதான தாக்குதல்கள் அனைத்தையும் நிறுத்திக்கொள்ள விடுதலைப்புலிகள் சம்மதித்திருப்பதாகத் தெரியவருகிறது.

இவ்வாறு 'சண்டே ஒப்சேவர்' செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-20)

## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லண்டனில் தலைமையகம் இயங்கிய கட்டடம் தற்போது தங்குமிடமற்ற தனியாள்களான தமிழர்களின் தங்குமிடமாக மாறியுள்ளது.

55 நாடுகளில் உள்ள விடுதலைப் புலிகளின் செயற்பாட்டாளர்களின் தகவல் மையமாக லண்டன் தலைமையகமே இதுவரை இயங்கி வந்தது. அங்கிருந்தே தகவல் பரிமாறப்பட்டு வந்தன. தற்போது 'இன்ரநெற்' போன்ற நவீன தகவல் தொடர்பு சாதனங்கள் இருப்பதால் வன்னிக் காடுகளில் இருந்தே சர்வதேச தொடர்புகளை மேற்கொள்ள வசதி உள்ளது. எனவே தான் புலிகள் தங்கள் சர்வதேச தலைமையகத்தை வன்னிக்கு மாற்றியிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

இவ்வாறு அந்த ஆங்கில வார இதழ் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ-20)

## சமாதானப் பேச்சு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ வெளிநாட்டுப் போராட்ட அமைப்புக்களைத் தடைசெய்யும் பட்டியலில் விடுதலைப் புலிகள் அமைப்பையும் சேர்த்திருக்கும் பிரிட்டிஷ் அரசின் தீர்மானத்தினால் சமாதான முயற்சிகளுக்கு இதுவரை பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை. காலப்போக்கில் இது விடயத்தில் நிலைமை எவ்வாறு அமையும் என்று எதிர்வுகூறமுடியாது.

☆விடுதலைப் புலிகள் அமைப்பைத தடைசெய்யும் நோக்கம் எதுவும் நோர்வேக்குக் கிடையாது. சர்வதேசப் பயங்கரவாதத்தை நோர்வே எதிர்க்கின்றது.

☆இலங்கை அரசையும் விடுதலைப் புலிகளையும் பேச்சு மேசைக்குக் கொண்டுவருவதற்காக மேற்கொண்டுவரும் அனுசரணை முயற்சிகளில் தற்போதைய நிலைவரம் குறித்து இந்திய அரசுக்குக் கடந்த வியாழக்கிழமை விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

☆தற்சமயம் ஐரோப்பிய நாடுகளில பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை ஜனாதிபதியுடன் பேசும் உத்தேசம் இல்லை. அவருடனான அடுத்த சந்திப்பு கொழும்பிலேயே இடம்பெறும்.

☆இலங்கை அரசாங்கத்தையும் விடுதலைப் புலிகளையும் பேச்சுக்கு முன்னரான புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடச் செயவதற்கு அடுத்த சந்திப்பின் போது தீவிர முயற்சிகளை மேற்கொள்ள இருக்கிறேன்.

☆பேச்சுக்கள் தொடர்பான கால அட்டவணையை வெளியிடமுடியாது. பேச்சுக்கள் எப்போது ஆரம்பிக்கும் என்பதைத் தற்போதைக்கு என்னால் கூறமுடியாது.

☆புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்படுமானால் அதை அமுல் செய்வது தொடர்பாக கண்காணிப்பதற்கான குழு குறித்து இலங்கைப் பத்திரிகைகளில் வெளியான விவரங்கள் வெறும் வதந்தியேயாகும். இப்படியான பட்டியல் விவரம் குறித்து இந்தியத் தரப்பில் இருந்து ஆட்சேபம் எதுவும் வரவில்லை. உண்மையில் எனது முயற்சிகளுக்கு இந்தியா பூரண ஆதரவு வழங்குகின்றது. என்னுடன் நடத்திய பேச்சுக்களின்போது இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்த்சிங் எனது முயற்சியைப் பெரிதும் பாராட்டினார். (ஐ-3)


**மட்டற்ற மகிழ்ச்சியுடன் பாராட்டி வாழ்த்துகிறோம்**



கடந்த 35 ஆண்டுகளாக இலங்கை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து யாழ்ப்பாணம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதம அமைப்பாளராகவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு உறுப்பினராகவும் இருந்து யாழ். மாவட்ட மக்களுக்கு பெரும் சேவையாற்றிய செயல்வீரர்

**திரு.வேல்முருகு தங்கராசா**

அவர்களை கடந்த 3ஆம், 4ஆம் திகதிகளில் கொழும்பில் இடம்பெற்ற இலங்கை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் 13ஆவது தேசிய மாநாட்டில் வைத்து மீண்டும் யாழ்.மாவட்ட பிரதம அமைப்பாளராகவும் இலங்கை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய குழு உறுப்பினராகவும் மேன்மைமிகு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்கள் தலைமையில் தெரிவு செய்யப்பட்டமைக்காக திரு.வேல்முருகு தங்கராசா அவர்கள் எமது மக்களுக்கு மேலும் பல வருடம் சேவைகள் செய்ய வேண்டுமென இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**யாழ்.மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினரும் அதன் ஆதரவாளப் பெருமக்களும்.**

(85349)


உ

சிவமயம



“கைப்போது மலர்தூவி காதலித்து வானோர்கள்
முப்போது முடிசாய்த்து தொழநின்ற முதல்வனை
அப்போது மலர்தூவி ஐம்புலனும் அகத்தடக்கி
எப்போதும் இனியானை என்னகத்தே வைத்தேனே”



இன்று (19.03.2001) திங்கட்கிழமை பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் யாழ்.வண்ணை ஸ்ரீ வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரன் ஆலய மகோற்சவத்தை முன்னிட்டு இப்பதிகம் பிரசுரிக்கப்படுகிறது.

சிவன்கோயிலடி,
யாழ்ப்பாணம்.

கனகசபை தர்மகுலசிங்கம்
“பழமுதிர்சோலை” காரைநகர். (85595)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.03.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.